www.padippakam.com


# புதியபூமி

PUTHIYAPOOMI

புதிய பூமி

சுற்று 1 | ஜூலை 1994 | விலை ரூபா 7/= | சுழற்சி 1


### தேயிலை விலை வீழ்ச்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

யூன் 13 ஆம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள 'தேயிலைச்சபை' கட்டிடத்தின் முன்னால் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். தேயிலைத் தோட்டங்களை தொடர்ந்து தங்களிடம் வைத்திருக்க விரும்பும் பல்தேசியக் கம்பனிகளின் திட்டமிட்ட செய்கையால் தேயிலை 'விலையில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் வீழ்ச்சியை எதிர்த்தே மேற்படி ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனைப் பொலிசார் தடுத்து நிறுத்தியதுடன் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பலரை விசாரணைக் குட்படுத்தினர். பொலிஸ், இராணுவப் பாதுகாப்புடன் நடைபெற்ற அன்றைய ஏலவிற்பனையில். தேயிலை விலை மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

# எதிர்க்கட்சியாக வருவதிலேயே யூ.என்.பிக்கு அக்கறை!

(நமது அரசியல் நிருபர்)

**எதிர்வரும் தேர்தலில்களில் யூ.என்.பி வெற்றிபெற முடியாது என்பதால் எதிர்வரும் பாராளுமன்றத்தில் பலமான எதிர்க்கட்சியாக வருவது எப்படி என்பதிலேயே யூ.என்.பி அக்கறை கொண்டுள்ளதாக யூ.என்.பி வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.**

**அதனாலேயே அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நடைபெறவிருந்த பாராளுமன்றத் தேர்தலை ஆகஸ்டு மாதம் நடத்த வேண்டுமென்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தீர்மானித்தார் என்று கூறப்படுகின்றது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது**

இன்று நிலவும் அரசியல் சூழ்நிலையில் ஆட்சி அமைப்பது என்பது முடியாத காரியம். அதனால் எதிர்வரும் பாராளுமன்றத்தில் பலமான எதிர்க்கட்சியாக வருவது பற்றியே யூ.என்.பி அக்கறை செலுத்த வேண்டும். எதிர்வரும் பாராளுமன்றத்தில் பலமான எதிர்க்கட்சியாகவும் யூ.என்.பிக்கு வரமுடியாது போனால் எதிர்காலத்தில் ஆட்சியமைபபது பற்றியே யோசிக்க முடியாது போகும் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன உட்பட சிரேஷ்ட யூ.என்.பி தலைவர்கள் பலரும் ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை முன்பதாக நடத்தினால் யூ.என்.பி தோல்வியடைவதுடன், அதனை அடுத்துப் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றால் பெரும்பாலான மக்கள் யூ.என்.பிக்கு எதிராகவே வாக்களிப்பார்கள். அப்படியானால் பாராளுமன்றத்தில் ஒரு பலமான எதிர்க்கட்சியாகக் கூட யூ.என்.பிக்கு வரமுடியாது போகலாம் என்பதினாலேயே ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க கட்சியினுள் நிலவும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் பாராளுமன்றத் தேர்தலை ஆகஸ்டில் நடத்த முடிவு செய்ததாக தெரிகிறது.

அத்துடன் செடி கொடி என்று தன்னால் வெறுத்து ஒதுக்கப்பட்ட சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற அவர்களை சமரசமாக அணுகக்கூட விருப்பமில்லாத டி.பி.விஜேதுங்க பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதன் மூலம் அவரது பேரின அகங்காரத்தை மேலும் ஒருபடி ஸ்திரப்படுத்தியுள்ளார்.

ஏனெனில் ''பாராளுமன்றத் தேர்தலை ஜனாதிபதி தேர்தலுக்கு ஒரு பரீட்சார்த்தமாகவே நடத்துகிறேன். பாராளுமன்றத் தேர்தலில் யூ.என்.பி தோல்வியடையுமாயின் நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன்'' என்றும் அவர் தெரிவித்துள்ளதை இங்கு கவனிக்க வேண்டியது அவசியமாகும்.



அதாவது ''தான் ஜனாதிபதியாகப் போட்டியிடாவிட்டாலும் பரவாயில்லை ஒருபோதும் சிறுபான்மையினரிடம் வாக்குக் கேட்டுக் கெஞ்சத் தேவையில்லை என்ற அவரது நிலைப்பாட்டை விளங்கிக் கொள்ள முடிகின்றது. செடி கொடி என்று பேசிய பிறகு சிறுபான்மையினர் ஒரு போதும் டி.பிக்கு வாக்களிக்க மாட்டார்கள். இதற்கு மத்தியிலும் யூ.என்.பி பாராளுமன்றத் தேர்தலில் வென்றுவிட்டால் தான் சிறுபான்மையினர் தயவின்றி வெல்லமுடியும் என்றே அவர் எண்ணம் கொண்டுள்ளார்'' என்று ஒரு இனத்துவ ஆய்வாளர் தெரிவித்தார்.

இதற்கு அப்பால் பல யூ.என்.பி எம்.பிக்களும் அமைச்சர்களும் கூட மனோரீதியாகப் பலவீனபபட்டு தாங்கள் இம்முறை ஆட்சியமைக்க முடியாதென்றும், பாராளுமன்றத் தேர்தலை முதல் நடத்துவது யூ.என்.பியின் தற்கொலைக்கு ஒப்பான செயல் என்றும் தெரிவித்துள்ளனர்.

தென் மாகாணத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றியைப் பற்றி ஆய்வு செய்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன ''தென் மாகாணசபைத் தேர்தலில் யூ.என்.பி விவசாயிகள் மத்தியில் மட்டுமன்றி நகரப் பகுதிகளிலும் தோல்வியடைந்துள்ளது. தென் மாகாணத்திலுள்ள எல்பிட்டிய, தெனியாய பகுதிகளிலுள்ள பெருந்தோட்ட மக்களின் வாக்குகளைப் பெறவில்லை. திஸ்ஸ மஹரகம, அம்பாந்தோட்ட, பலபிட்டிய போன்ற இடங்களிலும் யூ.என்.பி தனது நிலைகளை இழந்து விட்டது. இது ஏனைய பிரதேசங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதனால் யூ.என்.பி எதிர்வரும் தேர்தலில் ஆட்சியமைப்பது என்பது கடினமானது'' என்று அறிவித்துள்ளதாக அறிய முடிகின்றது.

## பனிச்சங்கேணி விசாரணைகள் எங்கே?

மட்டக்களப்பு பனிச்சங்கேணி எனும் இடத்தில் மார்ச் மாதம் இராணுவத்தின் கைவரிசை மீண்டும் காட்டப்பட்டது.

மேற்படி 'பனிச்சங்கேணி'யில் மார்ச் மாதம் ஒருநாள் 2.00 மணியளவில் மூன்று இராணுவ கவச வாகனங்கள் சென்று கொண்டிருந்த போது தமிழ்த் தீவிரவாதிகளால் வைக்கப்பட்டதாகக் கருதப்படும் கண்ணிவெடி வெடித்தது. இதில் மூன்றாவதாகச் சென்றுகொண்டிருந்த வாகனம் மாத்திரம் சிறுசேதத்திற்குள்ளானது. ஏனைய வாகனங்கள் எதுவித சேதத்திற்கும் உள்ளாகவில்லை. அத்துடன் இவற்றில் சென்ற இராணுவத்தினரில் எவரும் காயங்களுக்கும் உள்ளாகவில்லை. இருப்பினும் இதனால் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் தமது வாகனங்களை நிறுத்தி சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகாமையில் இருந்த 'பனிச்சங்கேணி' கிராமத்தைத் தாக்கத் தொடங்கினர்.

மொத்தம் 60குடிசைகள் அமைந்திருந்த அக் கிராமத்தில் 56குடிசைகள் முற்றாகத் தீயிட்டுக் கொழுத்தப்பட்டும் உடைக்கப்பட்டும் அழிக்கப்பட்டன. சாதாரண விவசாயப் பாமரர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். 56 வயது 'வீரன் வைரமுத்து' எனும் வயோதிபர் எரியும் நெருப்பில் தூக்கி வீசப்பட்டார். மேகந்தி என்ற 8 வயதுச் சிறுமியை இராணுவத்தினர் சுட்டதில் காலில் பெரும் காயத்துக்குள்ளானார். அத்துடன் வீ.இளையதம்பி (84 வயது), கே.சின்னத்தம்பி (75 வயது), சீ.தர்மவதி (37 வயது) எஸ். சின்னப்பிள்ளை (38 வயது), வீ.திலகேஸ் (18 வயது) என்போர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

மேற்படி பனிச்சங்கேணிப் பிரதேசம் காடுகள் சூழ்ந்த ஒரு பிரதேசமாகும். இக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் விவசாயம், மீன்பிடித் தொழிலையே தங்கள் வழமையான தொழிலாகக் கொண்டிருந்தனர். சம்பவ தினத்தோடு உயிரையாவது காப்பாற்றிக் கொள்ளும் நோக்குடன் அருகில் இருந்த காட்டை அடைந்தனர். காட்டிலிருந்து சில தினங்களின் பின்னரே வெளியே வந்தனர். எனினும் தங்கள் கிராமத்துக்குப் போகவில்லை. அகதி முகாமுக்கு வழமையைப் போல இம்முறையும் இன்னொரு கூட்டம் வந்து சேர்ந்தது. இன்று பனிச்சங்கேணி வெறிச்சோடிய ஆளில்லாத கிராமம்.

ஆனால், இராணுவத்தினர் இன்று.....அடுத்த பனிச்சங்கேணிக்காக அலைகின்றனர்

விசாரணைகள்; வழமை போல்....!

## ''ஹெல உறுமய'' யூ.என்.பியுடன் சேர்ந்தது, தொண்டாவின் பாடென்ன?

ஆறு சு.க.எம் பிக்கள் பதவி துறந்து யூ.என்.பியில் சேர்ந்துவிட்டனர். இவர்களில் 5பேர் 'ஹெல உறுமய' என்ற பேரினவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சுதந்திரக்கட்சியில் அநுராவிற்கு ஆதரவாக இருந்தவர்கள் மட்டுமன்றி அக்கட்சிக்குள் பேரினவாதப்போக்கை முன் தள்ளியவர்களாவார்கள்.

இந்த 5பேர் உட்பட சுதந்திரக் கட்சிக்குள் 'ஹெல உருமய' இயங்குவதால்தான் எப்படிப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர முடியும் என்று கேள்வி எழுப்பிய தொண்டமான் இப்போது யூ.என்.பியுடன் எப்படி இணைந்து கொண்டிருக்க முடியும்?

இந்த ஐந்து பேர் மட்டுமல்ல, திரு. அநுரா பண்டாரநாயக்கா மலையக மக்களுக்கு பிரசாவுரிமை வழங்கியதை எதிர்த்தவர் என்பதும் திரு. காமினி திசாநாயக்க பெருந்தோட்டங்களில் தனிச்சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் எல்லாம் இப்போது யூ.என்.பியில் இருக்கின்றனர்.

ஏன்? ஜனாதிபதியே, சிறுபான்மையினரைப் பற்றி என்ன கூறினார் என்பதெல்லாம் மறந்து விடுமா?

படிப்பகம்

www.padippakam.com



## NDT பாடநெறியை மூடிவிட அரசாங்கம் முயற்சி

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா (NDT) பாடநெறியை இல்லாமல் செய்வதற்கான அரசாங்கத்தின் ஏற்பாடுகளை எதிர்த்து மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதுவரையும் வருடத்திற்கு 350 மாணவர்கள் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியை கற்க மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு இலவச கல்வித்திட்டத்தின் கீழே அனுமதிக்கபணபட்டனர். இலவச கல்வித் திட்டத்தின் கீழ் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி போதிக்கப்பட்டதாலேயே இந் நாட்டின் வசதியற்ற மாணவர்கள் பலர் பெரிய பெரிய தொழில்நுட்பவியலாளர்களாக முடிந்தது. இலவச கல்வியை இல்லாமல் செய்துவிட வேண்டும் என்ற உலக வங்கியின் கட்டளையின் படி கல்வித்துறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அரசாங்கம் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் மேற்படி பாடநெறியை இல்லாமல் செய்வுவிட படிப்படியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பாடநெறியின் தராதரத்தை குறைக்க அதாவது மூன்றுவருட பாடநெறியை இரண்டு வருட பாடநெறியாக்க ஏற்பாடுகளை செய்து வருகிறது. அத்துடன் இவ்வருட அனுமதியில் மாணவர்களின் தொகை 25ஆல் குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இலவச பாடநெறியை இல்லாமல் செய்துவிட்டு அதே பாடநெறியை தனியார் நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்த அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது. அந்நிறுவனம் பெருந்தொகைப் பணத்தை கட்டணமாக அறவிடும். அதாவது இதுவரை முழுவதுமே இலவசமாகப் போதிக்கப்பட்ட பாடநெறியில் ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் சுமார் 45,000 செலவிட வேண்டி வரலாம். இதனை எதிர்த்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

## ஜே.வி.பியினால் வழங்கப்பட்ட காலக்கெடு!

ஜே.வி.பியின் தலைவர் சோமவங்ச அமரசிங்க அண்மையில் சிங்களப் பத்திரிகையான 'ஹிரு'வுக்கு அளித்த பேட்டியொன்றில் ஸ்ரீ.ல.சு.கட்சியுடனான பேச்சுவார்த்தைக்கான தங்களது நிபந்தனைகளைக் கூறியதோடு, அந் நிபந்தனைகளுக்கு உடன்பட்டால் மட்டுமே தங்களோடு அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரமுடியும் என்றும், பேச்சுவார்த்தைக்கு வருவதாயின் 1994 யூன் 15ம் திகதி இரவு 12 மணிவரை மட்டுமே சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிபந்தனைகளுக்கு ஸ்ரீ.ல.சு.கட்சி மட்டுமல்ல ஐ.தே.கவோ ஏன் பாராளுமன்ற இடதுசாரிகள் கூட உடன்பட மாட்டார்கள் என அரசியலாளர்கள் பேசிக் கொள்கிறார்கள். மேற்படி காலக்கெடு முடிந்து விட்ட நிலையில் ஜே.வி.பி தமது 'பாராளுமன்றத்துக்கு அப்பாலான' நடவடிக்கைளையே இனித் தொடரப்போகின்றது என நம்பப்பட்டது. எனினும் யூன் 19ம் திகதி 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தியில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட 'சோமவங்ச அமரசிங்க' விருப்பம் தெரிவித்துள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு நடக்குமாயின் ஏற்கனவே இடதுசாரிகளின் பலத்துடன் இருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வாக்குகளையே அது உடைக்கும் என்றும், ஜே.வி.பியானது ஐ.தே.கவைத் தோல்வியுறச் செய்வதாக கூறிக் கொண்டு அதனை வெல்லச் செய்யும் நடவடிக்கையாகவே இது இருக்கும் என்றும் பரவலாக பேசிக்கொள்ளப்படுகிறது.

## சிறுவர் விபச்சார பயிற்சிப் பாடநெறி!

சிறுவர் விபச்சாரத்தில் இலங்கை தற்போது முன்னணியில் இருக்கிறது. இலங்கைக்கு மேற்கொள்ளும் உல்லாசப் பிரயாணத்தை 'பாலியல் உல்லாசப் பிரயாணம்' என்றே கூறுகின்றனர்.

இலங்கைக்கு வரும் வெள்ளையர்களை எவ்வாறு திருப்திப்படுத்துவது என்பது பற்றி இலங்கையின் தெற்கு கடற்கரையோரங்களில் சிறுவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இதற்கெனதெற்கு கரையோரங்களில் பல பாடசாலைகள் நிறுவப்பட்டு காலையிலும் மாலையிலும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப் பாடசாலைகளில் 6வயதுக்கும் 12வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஒருமாத காலப் பயிற்சிநெறிகளைக் கொண்ட மேற்படி பாடநெறியில் வெள்ளையர்களுடன் எவ்வாறு சிறப்பாக நடந்து கொள்வது, அவர்களை கவரும் வகையில் தமது அங்கங்களை எவ்வாறு எடுப்பாக வைத்திருப்பது போன்றவற்றுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

ஒருமாத கடைசியில் சித்தியடைபவர்களுக்கு திறமையின் அடிப்படையில் சான்றுப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

சான்றுப் பத்திரங்கள் பெற்றவர்களுக்கு பெரும் கிராக்கி நிலவுகிறது. அவர்களுக்கு உடனே வேலை வாய்ப்பும் கிடைக்கிறது.

இந்தப் பயிற்சிப் பாடநெறி அரசாங்க உயர் அதிகாரிகளினது அனுசரனையுடன் 'பாதாள உலக உறுப்பினர்களால்' பாதுகாப்பாக நடத்தப்படுகிறது.

உலகிலேயே பௌத்த கலாசாரம் செழித்து விளங்கும் நாடு இலங்கை என்று கூறிக் கொண்டு கலாசாரத்துக்கென 7,8 அமைச்சரவைகளை வைத்திருக்கும் யூ.என்.பி அரசாங்கம் வாழ்க!


## 'ஹோல் சேல்' பிஸ்னஸிற்கு தயாராகும் முஸ்லிம் காங்கிரஸ்

"முஸ்லிம்கள் இதுவரை சில்லறை வியாபாரமே செய்து வந்துள்ளார்கள். எதிர்காலத்தில் மொத்த வியாபாரம் செய்வது பற்றியே சிந்திக்க வேண்டும்" என்று மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி நிஸ்புல்லாஹ் கூறியுள்ளார்.

இதுவரையும் முஸ்லிம்கள் யூ.என்.பி, சுதந்திரக்கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி, கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் போன்ற பல கட்சிகளுக்கு சில்லறையாக வாக்களித்தனர். அதைவிடுத்து முஸ்லிம் காங்கிரஸிற்கு மட்டும் மொத்தமாக வாக்குகளைப் போடும்படி அவர் கோரிக்கை விடுத்துள்ளார் என்பது விளங்குகிறதுதானே!

முஸ்லிம்கள் அப்படியே செய்யட்டும்! அப்போதுதான் வாழைச்சேனைப் பள்ளிவாசல் கொலைகள் போன்றன நடைபெறும்போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் மட்டும், அவர் மட்டுமே அரச விமானத்தில் கொழும்பிலிருந்து சென்று பார்வையிடமுடியும். எதிர்த்து 'பட்டும்படாமல்' அறிக்கையொன்றை விடமுடியும்.

முஸ்லிம் மக்களை வைத்துக் கொண்டு மொத்த வியாபாரம் நடத்தப் போவதாக வெளிப்படையாக கூறிய ஹிஸ்புல்லாஹ் 'நேர்மையைப் பாராட்டுவோம்.



சாணக்கியன்

## பூசணிக்காய் உண்டோ?

தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கையின் இயற்கைத் துறைமுகமாக விளங்கும் திருகோணமலையில் சில மாதங்கள் முன்னே நடந்து முடிந்த நகர சபைத் தேர்தலில் சுயேட்சைக் குழுவாக தமிழ் அமைப்பு ஒன்று வெற்றிபெற்றது. இதனால் சிவில் நிர்வாகம் மீளத் திரும்பியதோ என பிரமிப்பு ஏற்பட்டிருப்பது என்னவோ உண்மை தான்.

வடகிழக்கு மாகாண அரசு கலைக்கப்பட்டு ஆளுனர் நிர்வாகம் திணிக்கப்பட்டு அதிலும் தமிழ் மக்களின் அன்புக்குப் பாத்திரமான லயனல் பெர்னாண்டோ நியமனம் பெற்றமை ஒருபுறம்.

அடுத்த தேர்தலுக்கு ஆள்பிடிக்கும் படலம் ஆரம்பமாகிவிட்ட அவசரத்தில் பாராளுமன்ற தமிழ் அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் மறுபுறம்.

'சகஜ நிலை' தோன்றிவிட்டதென்ற சங்கோஜம் மக்கள் மனதில் ஒருவித (மயான) அமைதியை தற்காலிகமாக ஏற்படுத்தியுள்ளது.

இராணுவமும் பொலீசும் கண்கொள்ளாக் காட்சியாகக் கொட்டப்பட்டுக் குவிக்கப்பட்டுள்ளதை நீக்கமறவெங்கும் காணக்கிடைக்கிறது.

ஹபரனை முதல் அபயபுரம் ஈறாக இராணுவக் குடில்களும் றோட்டின் ஓரங்களில் தொடர்ந்து வெட்டப்பட்டுள்ளகிடங்குகளும்கொழும்பு-திருமலை ரோட்டில் ஒருவித பயத்தை ஏற்படுத்துகின்றன.

மூன்றுமைல் சுற்றாடலில் உள்ள நகரில் தெருச் சந்திகளில் பொலீஸ் மறிப்புகளும் காவலும் பிறிமா ஆலையின் அரக்கத் தோற்றமும் (பல்தேசியக் கம்பனியின் சுதந்திர வர்த்தக வலயமும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும்) மலைக்க வைக்கிறது. அந்நிய ஆக்கிரமிப்பிற்குட்பட்ட ராணுவப் பிரதேசமாகவே தோற்றமளிக்கிறது.

திருமலை அரச அதிபர் முதல் ஆளுனர் வரை கலந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் வட-கிழக்கு மாகாணத் தமிழ் அதிகாரிகளும் நிர்வாகிகளும் பெருமளவில் பங்குகொள்ளுமிடங்களில் சிங்கள மொழியே ஆட்சிப் பாஷையாகவுள்ளதெனப் பேசிக் கொள்ளப்படுகிறது.

தமிழ் வியாபாரிகள் லொறிகளில் உணவுப் பொருட்கள் ஏற்றவோ இறக்கவோ கொண்டுவரவோ இயலாது. தடைமுகாம்களில் "பூசணிக்காய் (குண்டு) உண்டா" எனக் கேட்டு கேலி செய்து லொறிகளை தடை செய்து விடுவார்கள்.

தமிழ் மீனவர்களுக்கு பாதுகாப்பென்ற சாட்டில் மீன் பிடிப்பதற்கும் அச்சுறுத்தல் செய்கிறார்கள். நகரப் பகுதியில் சில இடங்களில் திடீரென 'றவுண்ட் அப்'கள் நடக்கின்றன.

தமிழ் மக்கள் தமது அச்சத்தை மறந்து 'அசட்டுச்' சிரிப்புடன் காக்கிகளுக்கு கனம் பண்ணும் ஓர் 'கௌரவக்' கலாச்சாரத்திற்கு ஆட்பட்டுள்ளனர்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளாலும் இனிவரப்போகும் பாராளுமன்ற அங்கத்தவர்களாலும் 'ஆகப்போவதுதான் என்ன' என ஆங்கலாய்க்கின்றனர் மக்கள்.

## வீரமாகாளி அம்மன் சங்கிலியன் வாளும் பாராளுமன்றப் பசியும்

"ஆயுதம் தாங்காத கட்சிகளுடனணைந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவோம்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தேர்தல் கிளைப் புனரமைப்பில் கூறி வருகின்றனர்.

இது பற்றி இரு பொதுமக்கள் பேசுவதைக் கேட்போமா?

**ஒருவர்:** " முந்தி ஒருநாள் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலில் சங்கிலியன் வாளை எடுத்து " ஆயுதம் ஏந்தி ஏனும் தமிழீழம் காண்போம் என்று ஏன் அப்ப சொன்னது தெரியுமே! உண்மையிலே பாராளுமன்றத் தேர்தலை 1977ஆம் ஆண்டு முக்கிய 3தலைவரும் தோத்துப் போச்சினை. அது அடையுற ஆசையில சும்மா சொன்னது தானே. கூடக்கிடைக்கிறதும் குறையப் பெறுறதும் அல்லாட்டில் பெறாமல் போறதும் பேரப்பேச்சுப் பாராளுமன்ற அரசியலிலை வழக்கந்தானே?

**மற்றவர்:** "இப்ப ஏன் இப்படிச் சொல்லுகினமென்டால் மாகாணமபையில இயக்கத்தோட சேராமல் தனிச்சு நின்டிருந்தால் அஹிம்சையைக் காட்டி ஆள் சேர்த்திருக்கலாம். ஆயுதம் ஏந்தினதாலை சனத்திற்கேற்பட்ட இழப்பும் வெறுப்பும் தங்கடை பக்கம் வராமல் தான் தான் தப்ப வழியும் பாராளுமன்றப் பசியுந்தான்.

"பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்பது புது மொழியாயிற்றோ?

படிப்பகம்

www.padippakam.com



புதியபூமி
47, மூன்றாம் மாடி
கொழும்பு சென்றல் சுப்பர் மாக்கற் கொம்ளெக்ஸ்
கொழும்பு-11

## மாற்று ஆட்சியே மக்களின் விருப்பம்

நாட்டில் ஜனாதிபதி தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறுவதற்கு இன்னும் சில மாதங்களே இருக்கின்றன. அத்தேர்தலுக்கான தயாரிப்புகளில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சிகளும் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றன. ஆளுங்கட்சி தனது கடந்த காலத்தின் சாதனைகளைப் பெரிதாகக் காட்டுவதிலும், மக்களின் உடனடிக் கவனத்தைத் திருப்பும் வகையிலும் மக்களுக்குப் பல்வேறு சலுகைகள், சன்மானங்கள், கையூட்டுக்களை வழங்கி வருகின்றது. இது தேர்தலுக்கான ஒரு வகை லஞ்சம். இதை மக்கள் அறிந்து கொள்ளாமலுமில்லை. அதேவேளை இந்த ஆட்சியின் கடந்த காலத்தின் பாதகச் செயல்களையும் மக்கள் பெற்ற பாதிப்புக்களையும் பட்டியல் இட்டுக் காட்டுவதில் எதிர்க்கட்சிகள் குறிப்பாக எதிரணிக் கூட்டு மும்முரம் காட்டி வருகின்றது.

இத்தகைய சூழலிலே நாட்டு மக்களின் பல்வேறு பிரிவுகளும் கடந்த கால ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட கால ஆட்சியின் தன்மைகளையும் அவற்றின் விளைவுகளையும் மீள் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கிப் பார்க்கின்றனர். அவ்வாறு பார்க்கும்போது இன்றைய ஆட்சியின் மீது தமது சலிப்பையும் வெறுப்பையும் மக்கள் வெளிகாட்டி வரும் போக்கினைக் காண முடிகின்றது.

நாட்டின் பொருளாதார அரசியல் சமூகத் துறைகள் அனைத்திலும் இன்றைய அரசாங்கம் பாதக விளைவுகளையே தோற்றுவித்து வந்தவற்றின் அடையாளங்களை மக்கள் மிகத் துலக்கமாகக் காண்கின்றனர். அரிசிக்குக் கையேந்தும் நிலைதொட்டு அந்நியர்கள் கோடிகோடியாக அள்ளிச் செல்லும் நிலைவரை தேசியப் பொருளாதாரம் சிதைக்கப்பட்டுள்ளமையையும் மக்கள் காண்கின்றனர். விலைவாசி உயர்வும், வேலையின்மையும், கல்விச் சீரழிவும் சகலவற்றிலும் தனியார்துறை ஆதிக்கமும் மக்களைச் சினம் கொள்ள வைத்து வருகின்றன. அதேபோன்று ஜனநாயகக் குடியியல் உரிமைகள் மறுக்கப்பட்டமை தொடக்கம் புதைகுழிகளிலிருந்து மண்டையோடுகள் எலும்புகள் வெளிவருவது வரை மறைக்கப்பட்ட அரச பயங்கரவாதக் கொலைவெறிச் சம்பவங்களும் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் சிகரமாகப் பாதாள உலகமும் அங்கு சஞ்சரித்த 'சொத்தி உபாலி'களும் மக்கள் முன் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் யுத்தம் முன்னெடுக்கப்படுவதன் அடிப்படை நோக்கமும் அம்பலப்படுத்தப்பட்டு வருகின்றது. அதிகார நீடிப்பிற்கும் உயர் நிலைத் தலைவர்களும், அரச இராணுவ அதிகாரிகளும் தத்தமது சொத்துச் சேகரிப்புக்குத் தமிழ் மக்கள் மீதான யுத்தத்தை நீடித்துச் செல்லும் உள்ளார்ந்த நிலை பகிரங்கத்திற்கு வந்துகொண்டிருக்கின்றது. 'யுத்தம் வேண்டாம் சமாதானம் வேண்டும்' என்ற கோஷம் பேரினவாதப் போக்கினை விஞ்சி நிற்கின்றது.

ஒட்டு மொத்தத்தில் நாட்டு மக்களில் ஏகப் பெரும்பான்மையோருக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பதிலாக மாற்று அரசாங்கம் ஒன்றே தேவைப்படுகின்றது. இதனை ஒரிரு சந்தர்ப்பங்களில் அவர்கள் வெளிப்படுத்தத் தவறவில்லை. மாற்று அரசாங்கம் ஏற்பட வேண்டுமென்பதில் நமக்கு எவ்வித மனத்தடைகளும் இல்லை. ஆனால் ஏற்படப் போகும் மாற்று அரசாங்கம் மக்கள் அனைவரினதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தெளிவான மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உருவாக வேண்டும் என்பதே நமது வற்புறுத்தலாகும்.

தேசிய பொருளாதாரம், தேசிய ஜனநாயகம்- மனித உரிமை, தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்னும் முப்பிரிவுகளையும் உள்ளடக்கிய மாற்று வேலைத்திட்டத்தின் ஊடாகவே மாற்று அரசாங்கம் தோற்றுவிக்கப்பட வேண்டும். மக்கள் அத்தகைய புதிய மாற்றினையே விரும்புகிறார்களே அன்றி ஆட்களை மாற்றுவதை அவர்கள் விரும்பவில்லை. ஆட்கள் மாறுவதால் பிரச்சினைகள் தீர்ந்து விடப் போவதில்லை. திட்டங்களும் செயற்பாடுகளும் நமது நாட்டிற்கும் மக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் விதத்தில் முன்னெடுக்கப்படுவதே மக்கள் விரும்பும் மாற்று அரசாங்கத்தின் தேவையாகும். இதனைச் சகல தேசிய, ஜனநாயக, முற்போக்கு சக்திகள் உணர்ந்து மக்களின் அபிலாஷைகளை நோக்கிய திசையில் செல்ல வேண்டும். இன்றைய சூழலில் அதுவே தேவையானதாகும்.

- ஆசிரியர் குழு

## யூ.என்.பியை மீண்டும் ஆட்சியிலமர்த்த சிறுபான்மையினருக்கு எதிராக தொண்டா-அஷ்ரப் சதித்திட்டம்

இ.தொ.கா தலைவர் எஸ். தொண்டமானும் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பும் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு யோசனையை முன் வைத்துள்ளார்களாம். அதனை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும், அரசாங்கத்துடனும் பேசப் போவதாகவும் அவர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர்.

அவர்களது யோசனைகளின் அடிப்படை வடக்கு கிழக்கு இணைந்த பிராந்தியசபையில் முஸ்லீம்களுக்கென ஒரு உபபிராந்திய சபையை ஏற்படுத்துவதாகும்.

இதைப்பற்றி கிட்டத்தட்ட எல்லோருமே வாயால் மட்டுமன்றி மூக்காலும் புகழ்கின்றனர். தொண்டமான் - அஷ்ரப் யோசனைகள் என்பது ஒன்றும் புதிதல்ல. வடக்கு கிழக்கு இணைந்த பிரதேச சுயாட்சி ஆட்சி ஏற்படுத்த வேண்டும் அத்துடன் அப் பிரதேசத்தில் வாழும் சிங்கள, முஸ்லீம் மக்களுக்கு தனித்தனியே சுயாட்சி உள்ளமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் யோசனைகள் முன் வைக்கப்பட்டது தெரிந்ததே. 1988ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது முன்வைக்கப்பட்ட D.P.A யோசனைகளும் சில விடயங்களில் தொண்டமான் - அஷ்ரப் யோசனைகளுடன் ஒத்துக் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய நிலைமையில் இனப் பிரச்சினைக்கான யோசனைகளில் தமிழர்களுக்கு அதிக உரிமைகளை வழங்கும் யோசனைகள் யாவை என்பதில் கவனம் செலுத்துவது மட்டுமன்றி முன்வைக்கப்படும் யோசனைகளின் பின்னணி என்ன என்பதுமே மிகவும் பிரதானமாகக் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் படி அறிமுகம் செய்யப்பட்ட மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்துவதில் பல வழிகளிலும் இடைஞ்சலாக இருந்தது யூ.என்.பி அரசாங்கம். மாகாண சபையை விட வேறு தீர்வு காணப்போவதாக பிரேமதாச தலைமையிலான யூ.என்.பி அரசாங்கம் புலிகள் இயக்கத்துடன் பேசியது; பின்னர் பாராளுமன்றத் தெரிவுக் குழு என்று மூன்று வருடங்கள் இழுபட்டன.

பிரேமதாசவிற்குப் பின் டி.பி.விஜேதுங்க தீர்வுகள் பற்றிக் கதைப்பதை விட்டு சிறுபான்மையினரை மரம்-செடி-கொடி என்று கதைத்தார்.

அரசாங்கத்தினுள் நுழையும் வரை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்று கதைத்த அமைச்சர் காமினி திஸநாயக்க இப்போது வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வும் காணப்பட வேண்டும், ராணுவத் தீர்வும் காணப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

பிரதமரோ நாட்டின் இலஞ்ச ஊழல் மோசடிகளை ஒழிக்கவும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் யோசனைகளை முன் வைத்துள்ளாரே அன்றி இனப் பிரச்சினை பற்றி என்றும் கதைப்பதாக இல்லை!

எனவே 'வடிவான யோசனைகள்' என்று புகழப்படும் அஷ்ரப் - தொண்டமான் யோசனைகள் யூ.என்.பி அரசாங்கத்தில் எந்தத் தலைவரால் முன்னெடுக்கப்படும்?

அஷ்ரப்பும், தொண்டமானும் சேர்ந்து தமிழ், முஸ்லீம் மக்களிடையே செல்வாக்கினை இழந்துள்ள யூ.என்.பிக்கு உயிர் கொடுத்து மீண்டும் யூ.என்.பியை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காகவே அவர்களது யோசனைகளை முன்வைத்து உள்ளனர்.

வடக்கில் எப்படியாவது தேர்தல் நடத்த வேண்டும் என்பதும்





சிறுபான்மையினரின் வாக்குகளை எப்படியும் பெறவேண்டும் என்பதுமே யூ.என்.பியின் விருப்பமாகும். அதற்காக தொண்டமான் எப்போதும் தயார் என்பதை நிரூபித்து வந்துள்ளார். ஜனாப். அஷ்ரப் எப்படியாவது தொண்டமானின் இ.தொ.காவைப் போன்று முஸ்லீம் காங்கிரஸ் யூ.என்.பியுடன் கூட்டுச் சேர்ந்து தான் ஒரு அமைச்சராகி விடவேண்டும் என்று நீண்ட நாட்களாக விருப்பம் கொண்டுள்ளார். யூ.என்.பியின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தரும்படி அவர் தொண்டமானைக் கடந்த ஒரு வருடமாகப் பலமுறை சந்தித்துக் கேட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் வருகின்ற தேர்தலை பலவீனமான நிலைமையில் எதிர்நோக்கும் யூ.என்.பியிடம் தாங்கள் தட்டிக் கொள்ள நினைத்தே அஷ்ரப்பும் தொண்டமானும் யோசனைகளை முன் வைத்துள்ளனரே அன்றி சிறுபான்மையினரின் நலன் கருதி அன்று.

அவர்கள் சிறுபான்மையினரின் நலன் கருதி அவர்களின் யோசனையை ஜனாதிபதியிடம் கொடுத்திருந்தால் யூ.என்.பி அரசாங்கத்தை அதனை நடைமுறைப்படுத்தக்கோரட்டுமே!

அதை விடுத்து யூ.என்.பியின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு ஒரு யோசனையாக முன்வைக்க இவர்கள் ஏன் இவ்வளவு பாடுபடுகிறார்கள்?

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் இருந்து நடைபெற்ற ஜனாதிபதி, பொதுத் தேர்தல்கள் எல்லாவற்றிலும் தொண்டமான் யூ.என்.பியை ஆதரித்தார் என்பது தெரிந்ததே.

1989 ஜனாதிபதித் தேர்தலில் D.P.A யோசனைகளை ஆக்குவதில் அஷ்ரப்பும் ஈடுபட்டிருந்த போதும் கடைசி நேரத்தில் பிரேமதாசவுடன் கூடிக் கொண்டு D.P.A யோசனையில் கைச்சாத்திடவில்லை. யூ.என்.பிக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இடையே மோதல் வந்த போதெல்லாம், ஏன் பிரபலமான 'இம்பீச்மென்ற்' பிரேரணையின் போது கூட யூ.என்.பியுடனேயே இருந்தார் அஷ்ரப்.

ஆனால் முஸ்லீம் மக்கள் கண்ட பயன் என்ன?

மாகாண சபைகள் கொண்டு வரப்பட்ட போது தொண்டமானும், அஷ்ரப்பும் மௌனமாக இருந்தனர். பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டங்கள் நடைபெறும் போதும், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெறும் போதும் கூட யூ.என்.பியை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இணங்கச் செய்ய முடியாத அஷ்ரப்பும் தொண்டமானும் வரப்போகிற தேர்தல்களை மனதில் கொண்டு தமது இருப்பை அடையாளப்படுத்துவதால் சிறுபான்மையினருக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை.

அஷ்ரப் -தொண்டமான் யோசனைகளின் நோக்கம்

- **யூ.என்.பிக்கு அதனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வலுப்படுத்தி,புலிகளுடன் பேச்சுவார்த்தையைதொடக்கி வடக்கில் தேர்தலை நடத்த உதவுவது.**
- **சிறுபான்மையினரின் ஆதரவை யூ.என்.பிக்குப் பெற்றுக் கொடுப்பது.**
- **தொண்டமான் தனது பலத்தை அதிகரித்துக் கொள்வதுடன், அஷ்ரப்பை ஒரு அமைச்சராக்குவது.**

மேற்கூறப்பட்ட நோக்கங்களை வெற்றி கொள்ள

- **அஷ்ரப்-தொண்டமான் யோசனைகள்.**
- **ஒரு பேச்சுவார்த்தை**
- **தேர்தல்கள்**
- **தேர்தல்களில் யூ.என்.பிக்கு அமோக வெற்றி!**

இவையெல்லாம் நடைபெறலாம். ஆனால் மீண்டும்

- **சிறுபான்மையினர் அழிப்பு யுத்தம்**
- **ஜனநாயக மனித உரிமைகள் மறுப்பு**
- **நாட்டிற்கு அழிவு** என்பன நிரந்தரமாக்கப்படலாம்!

www.padippakam.com



## விடியாத, கொடூர இரவுகளுக்கு விடிவெள்ளி ஒரு மாற்று!

தொடர்ச்சியாக ஒரே அரசாங்கம் இருந்தால்தான் அதனது அபிவிருத்தி திட்டங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி மக்களை சுபீட்சமுள்ளவர்களாக உயர்த்தமுடியும் என்று கூறிக் கொண்டே கடந்த 17 வருடங்களாக யூ.என்.பி. எங்களை எல்லாம் ஆண்டுவருகின்றது. இன்னொரு முறையும் எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றி விட வேண்டுமென்பது யூ.என்.பியின் திடசங்கற்பமாகும்.

கடந்த 17 வருடங்களாக இலங்கையின் பல்வேறு இனங்களுக்கிடையேயும் அமைதியும் நல்லுறவும் குறைந்து இனங்கள் சந்தேகத்துடனும், பகைமை உணர்வுடனும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன

நாட்டைத் திறந்து விடுவதாகக் கூறிக் கொண்டு பல்தேசியக் கம்பெனிகளின் கொள்ளைக்குரிய மிகவும் வசதியான இடமாக இலங்கை மாற்றப்பட்டதால் 1977 இல் 4 ரூபாவிற்கு வாங்கக்கூடிய அமெரிக்க டாலர் இன்று 50 ருபாவாக உயர்ந்துள்ளது. 70சதத்திற்கு வாங்கிய அரிசி 20ரூபா வாகவும் 35சதத்திற்கு விற்கப்பட்ட பாண் 5ரூபா வாகவும், 4.50சதத்திற்கு வாங்கப்பட்ட பால்மா 85ரூபாவிற்கும் விற்கப்படுகின்றது.

மக்களின் நலன்புரி சேவைத்துறைகளான கல்வி போக்குவரத்து, சுகாதாரம் என்பன தற்போது உயர்ந்த விலை போகின்றன. கல்வி கற்க முடியாத ஏழைச் சிறார்கள் 'குடு' விற்கவும், விபச்சாரத்தில் ஈடுபடவும் தூண்டப்பட்டு வருகின்றனர். 10சதத்திற்கு கடந்த தூரத்தை 1.50சதத்தைக் கொடுத்தும் குறிப்பிட்ட நேரத்திற்கு வேலைத்தளத்திற்குக் கூடப் போகமுடியாத அளவிற்குப் போக்குவரத்து தனியார் மயமாக்கப்பட்டுள்ளது. சாதாரண தலைவலி காய்ச்சலுக்குக்கூட மருந்து தரமுடியாத அளவிற்கு நாட்டின் வைத்தியத்துறை கைவிடப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலைகள் வெறும் கட்டிடங்களாகக் காட்சி அளிக்கின்றன. 'எயிட்ஸ்' போன்ற கொடூரமான நோய்களுக்கு மருந்தைத் தேடும் யுகத்தில் 'வெஸ்ட் எயிட்' கூட செய்ய முடியாதுள்ளோம்.

லஞ்சமில்லாமல் அரசாங்கக் காரியாலயங்களில் ஒரு காகிதம் கூட அசைய மறுக்கிறது. ஊழலும், மோசடியும் நிறைந்ததே பொதுத்துறைகளாக மக்கள் வாழ்வுடன் நாளாந்தம் போராடிக் கொண்டிருக்கின்றன.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய உயர்ந்த திணைக்களமான சட்டமா அதிபர் திணைக்களம் கூட அரசியல் தலையீட்டால் முக்கித் திணறிக் கொண்டிருக்கிறது நீதித் துறையின் சுதந்திரம், மக்களின் அடிப்படை உரிமைகள் என்பன ஆங்கிலம் கற்றவர்களின் கருத்தரங்குகளின் கருப்பொருளாகி விட்டது.

கலந்துரையாடல், இணக்கம், விமர்சனம் என்பதெல்லாம் மறைந்து கொலைகளே அரசியல் வாழ்வைத் தீர்மானிப்பனவாகி விட்டன. கற்பழிப்பையும், கோரத்தையும் நியாயப்படுத்த வேண்டிய கலாசாரப் பண்பாட்டுத் தத்துவங்களை தேடவேண்டி யவளாக இலங்கை மாதா நிர்வாணமாக முச்சந்தியில் விடப்பட்டுள்ளார்.

பத்து வருடங்களுக்கு மேலாக நடைபெறும் யுத்தம் சகல சமூகத்தினதும் இளைய தலைமுறையைப் பலியெடுத்து வருகின்றது. திறந்த பொருளாதாரத்தால் மட்டுமன்றி நீடித்த யுத்தத்தினாலும் நாட்டு மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார வாழ்வு சீரழிக்கப்பட்டு விட்டது. 'லொட்ஜ்' வாழ்க்கை முறையாலும் வெளிநாட்டு மோகத்தாலும் மூழ்கிக் கொண்டிருக்கும் மூதத தமிழ்க் குடியினரின் கலாசாரமும் விபச்சாரத்தையும், குடுவையும், மேலைத்தேயக் குடும்பச் சீரழிவுகளையும் உள்வாங்கிக் கொண்டிருக்கும் பௌத்த கலாச்சாரமும் பள்ளிவாசல்களையே பெரிதாக மதிக்கும் முஸ்லிம் மக்கள் அவற்றினுள்ளேயே கொலைகளைத் தரிசிக்கும் முறைமையுமே இன்று முழுமையாகிக் கொண்டிருக்கின்றன.

இவற்றிலிருந்தெல்லாம் தப்பிப் பிழைக்க ஒரு மாற்று வாழ்க்கை முறைமைக்காக மாற்று அரசியல், சமூக, பொருளாதார கலாசாரத்தை தரிசிக்க ஜீவமரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் இலங்கையர் சமூகத்திற்கு யூ.என்.பி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினால் மரணமே நிச்சயம்.

ஆகவே மாற்று அரசாங்கத்தையே இன்றைய தேவையாகக் கொண்டுள்ள இலங்கை மக்களிடம் யூ.என்.பி தோல்வி காண வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

•எஸ்.குமாரவேல்

# லயம்

லயம்

இந்தச் சொல் எதனைக் குறிக்கின்றது? இதன் கருத்து யாது? இது நல்ல சொல்லா? கெட்ட சொல்லா? அழகானதா? அசிங்கமானதா? வினாக்களை அடுக்கலாம் விடை ..... ?

விடையா?

விடை விரும்பியவாறு அமைத்துக் கொள்ளலாம் அவ்வாறெனில் நெகிழும் விளக்கத்தை அடக்கமாக கொண்ட சொல்லாக அமைந்திருக்கின்றது. இச் சொல்லின் சரியான உருவம் யாது?

லைன்-Line என்ற ஆங்கிலச் சொல்லின், அதே ஒலி, சிறிது மாற்றத்தோடு லயனாக வந்திருக்கின்றது. லைனாக இல்லாமல் லயனாக இருப்பதிலும் ஒரு சிறப்பு இருக்கின்றது. லயனாக மாறியதால் லயமாக மருவுவதற்கு இலகு பெற்றிருக்கின்றது. அதிலும் ஒரு லயம் ஏற்பட்டு விடுகின்றது. அந்த லயம் அனுபூதி என்பார்களே அதன் பாற்பட்டது ஏனெனில் லயத்தோடு ஒன்றி, லயத்துவாசியான லயத்தானுக்குத் தான் அந்த லயமான எண்ணம் ஏற்படும். ஆக, லயம் எனும் சொல் ஒரு குறிப்பிட்ட வாழ்வியலைக் கொண்ட மக்கட் கூட்டத்தின் வரலாறோடு ஒன்றி விட்ட சொல் இந்தச் சொல் ஒரு கூட்டத்தாருக்கு லயமானதாக இருந்தாலும், இன்னொரு சாராருக்கு அருவருப்பான தாக ஆகுசையானதாக அசிங்கத்தின் அடையாளமாகப் படுகின்றது.

ஏன்?

சொல்லுக்கும் சமூக அந்தஸ்துக்கும் உள்ள உறவினை நாம் இதில் காணுகின்றோம். சொல்லுக்கும், அது ஏற்று நிற்கும் பொருளுக்கும் உரித்தான மாந்தருக்கும் உள்ள சமூக அடையாளத்தை நாம் இதில் காணுகின்றோம். இந்த சமூக அடையாள் வாழ்வியலோடும் வாழ்வியலின் முரண்களோடும் சம்பந்தமுடையது. ' உலகம் என்பது உயர்ந்தோர் மாற்றே' என்பார்களே அதேபோன்று இச்சொல் இழிவானதின் வெளிப்பாட்டு வடிவமுமாகலாம். இனிமையான மனோரதிய சுகானுபவத்தின் வெளிப்பாடு மாகலாம்.

''எட்டடி குச்சிக்குள்ளே -இறைவா எத்தனை நாள் கிடப்பேன்?''

இது பழைய பாடல் வரி. இதனோடு தொடர்புடையதான பத்தடி நீளமும் எட்டடி அகலமும் கொண்ட தொடர் அறைகளைக் கொண்ட -பத்து, எட்டு, பதினாறு- அறைகளைக் கொண்ட- பெருந்தோட்டத் தொழிலாளரின் இருப்பிடமே லயன்கள். சில இடங்களில் இடது பக்கத்திலும் , வலது பக்கத்திலும் தொடர் அறைகள் இருக்கும். இவை ரெட்ட (இரட்டை) லயன்கள். லயனில் இருக்கும் அறைகளைக் குறிப்பது தான் 'காம்ரா'. காம்ரா என்பது ஒரு போர்த்துக்கீச மொழிச்சொல்லின் வாரிசு.

தொடர் அறைகளைக் கொண்ட அருகருகே அமைந்திருக்கும் லயன்கள், அந்த அமைவோடு இயைந்த வாழ்க்கை முறையை அதில் வாழும் தொழிலாளர்களுக்கு உரித்தாகியுள்ளது.

ஆரம்பகால லயன்கள் கருங்கற்களையும், செம்மண்ணையும் கொண்டு கட்டப்படவை. கூரைகள் மரக்கம்புகளால் (பராலை) செய்யப்பட்டு, புற்களால் வேயப்பட்டு இருந்திருக்கின்றன. பனையோ தென்னையோ இல்லாத பிரதேசத்தில் கோரைப்புற்கள் கூடை வேயப் பயன்படுத்தப்படுகின்றன.

மண்ணை மீளப் பதப்படுத்த(RE--CONDITION)இன்னும் பயன்படுத்தப்படும் மானாப் புற்கள் கூடை வேய லாவகமானவை. இன்னும் கால்நடைக் கொட்டில்கள் இதனால் வேயப்படுகின்றன. தோட்ட மக்கள் இப்புற்களால் கூடை வேய்வதில் வல்லவர்கள்.

மலைப் பிரதேசத்தில் கோப்பிச் பயிர்ச்செய்கை ஆரம்பமான 1830ஆம் ஆண்டுக் காலத்தில் இவ்வாறான லயன்கள் கட்டப்பட்டன. அன்று கட்டப்பட்ட லயன்கள் இன்றுங் கூட ஆடாமல் அசையாமல் நிலை பெற்றிருக்கின்றன.

என்ன அதிசயம்!

சுமார் 160 ஆண்டுகள் அச்சுக் குலையாமல் அப்படியே இருப்பது!

கோப்பிப் பயிர் போய் தேயிலை அதனிடத்தைப் பிடித்த பின்னர் தொடர்ந்து வாழத் தொழிலாளர் கூட்டம் தேவைப்பட்டது. இதனால் கூடிய லயன்கள் கட்டப்பட்டிருக்கும் ஜேம்ஸ் டெயிலரினால் நூல் கந்துரா தோட்டத்தில் கட்டப்பட்ட லயன்கள் போல் இன்னும் கூட அவை அசையாமல் நிற்பது ஆச்சரியத்திற்குரியதன்று. ஏனெனில் இதில் வாழும் மக்களின் வாழ்நிலையுங் கூட ஆடாமல் அசையாமல் அமரத்துவமாகி இருக்கின்றது. என்னே ஒற்றுமை! மக்கள் வாழ்வியலும், வாழிடமும் மாறாதிருக்கும் விந்தை!

கோகிலம் சுப்பையாவின் தூரத்துப் பச்சை நாவலிலும், இரா. கோபாலின் சிரிக்கும் செவ்வந்திந்திப்பூ தொடர்கதையிலும் நாம் அக்கால லயத்து வாழ்க்கையைத் தரிசிக்கின்றோம். டெனன்ட் போன்றோரின் குறிப்புகளிலும் லயத்துச் சூழலைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

அக்காலத்து லயன்கள் பெரும்பாலும் மலைச்சரிவுகளின் அருகே கட்டப்பட்டன. அதேவேளை துரைமாரின் பங்களாக்கள் மலை உச்சியில் கட்டப்பட்டன. மலை உச்சியிலிருந்து தொழிலாளர்களைக் கண்காணிப்பதற்கு வசதியாக இருக்குமென்று இவ்வாறு அமைக்கப்பட்டதோ அல்லது அவர்களின் அவல வாழ்க்கையைக் காட்சியாகக் கண்டு களிப்பதற்காகக் கட்டப்பட்டதோ தெரியவில்லை. ரோமப் பேரரசுகளின் நாகரீகப் பொழுது போக்கான மனிதனையும், கோர மிருகங்களையும் சண்டையிட வைத்துக் கண்டு களித்த வரலாறு இப்படியும் எண்ண வைக்கின்றது. மலைச் சரிவுகளில் லயன்கள் அமைக்கப்பட்டதால் நூற்றாண்டுகளுக்குப் பின்னர் அவை மண்சரிவால் மூடி மறைவதனை இன்று நாம் காண்கின்றோம். 1969 டெவன் தோட்டத்தில் இவ்வாறு மண்சரிவுக்குட்பட்ட லயத்து வாழ் மக்கள் கோரமாக மடிந்தனர்.



1968ல் பெரகலையிலும், 1973ல் டியனிலையிலும் அண்மைக்காலங்களில் அப்புத்தளையிலும், தலவாக்கொல்லையிலும் இவ்வாறு மண்சரிவால் பாதிக்கப்பட்ட விடயம் பலரும் அறிந்ததே.

கோப்பி, தேயிலை தோட்டங்களுக்குத் தென் இந்திய வறிய கிராமங்களிலிருந்து பெரிய கங்காணிமார் ஆள்பிடித்து வந்த கதை பலரும் அறிந்ததே. நிலமானிய சமுதாய அம்சமான ஜாதி முறை தென் இந்தியக் கிராமங்களில் இருந்து அப்படியே புலம் பெயர்ந்து தோட்டங்களுக்கு வந்தது. இதில் வேடிக்கைகளும் சுவாரசியத்திற்குமான விடயம் ஒன்றுண்டு. தென்னிந்திய கிரா

மங்களிலிருந் பெயர்ந்தோர் குறைந்த ஜ இங்கு வந்த சிலர் மேல்ஜ ஆகிவிட்டது இவர்கள் எ தெய்வ வழிப கள் எல்லோ தெரியும். இ நாகரிகமாக ஜாதி அடுக்கி அமைக்கப்ப

இவர்கள் எ வழிபாட்டா வழிபாட்டா சமூகப் பிை




ஏழு தலைமுறைக
அலெக்ஸ் ஹேலி
தமிழில் ஏ.ஜி. எத்தி
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1 தாயார் சாகிப் 2
சென்னை 600 002

ஆபிரிக்க மண்ணிலிருந்து அமெரிக்காவிற்கு பூச்சாண்டிகளாலும் கருங்காலிகளாகிவிட்ட கா கொடுக்கும் கறுப்பர்களாலும் கடத்திவரப்பட் ஏழு தலைமுறைக் கதை. கறுப்பை வெறும் பே புனிதமாகக் காட்டாத அதேவேளை கருநாவற் கறுத்த மேனிகளின் உள்ளே உயிரோட்டத்துட மனிதத்தை ஓவியமாய்க் கண்முன் நிழலாடச் ஒரு நாவல். மொழிபெயர்ப்பு நூல் என்ற சிரம தமிழாக்கம். நாவல் கற்பதில் ஆர்வம் உள்ள ஒ வரும் கண்டிப்பாகப் படிக்கவேண்டிய ஒரு நா



வெள்ளிப்பாதசர
(இந்த நூற்றாண்டின் ஈழத்து
தொகுப்பாசிரியர்க
யோ.சுந்த
செ. யே
விற்பனையுரிமை :
காந்தளகம்,
4, முதல்மாடி, ரகிச
834 அண்ணாசால
சென்னை 600 00

'ஈழத்து இலக்கியம் பற்றி பரவலாக இன்று பே ஆனாலும் அதன் உண்மையான வளர்ச்சித் தன் பார்வையில் அறிந்து கொள்வதற்கு -படைப்ப பொறுத்தவரை முழுமையான ஒரு தொகுதி இ உருவாக்கப்படவில்லை''. இந்தக்குறையை நி வகையில் ஐந்து தொகுதிகளுக்குரிய நீண்ட கு முதல்தொகுதி வெளிவந்துள்ளது. இது '' வெள்ளிப்பாதசரம்'' எனும் தலைப்பில் வந் இலங்கையர்கோனின் இந்தச் சிறுகதைத் தலை இத்தொகுதியின் சாரத்தையும் கோடிட்டுக் கா


படிப்பகம்



# லயத்துவாசி

புலம்
லாரும்
ஆனால்
ர்களிற்
ழ்ஜாதி
டயம்.
சிறு
இவர்
ான்பது
ன்னால்
லவா?
களும்
தெய்வ
தெய்வ
கமான
யவர்க

ளாகவும் இரத்த வழி உறவு முறையை நேசிப்பவர்களாகவும் இருக்கும் சமூக வியல் உண்மையை மக்களிடையே காண்கின்றோம். சிறு தெய்வ வழிபாட்டாளர்கள் தமது தெய்வங்களை நெருக்கமாக விசுவாசிப்பவர்கள். அதனால் தமக்குப் பக்கத்திலேயே இத் தெய்வங்களையும் வைத்துக் கொள்கின்றனர். கோவிலினுள்ளும் ஆலமரங்களின் அடிகளிலும் சிலைகளாகவும் கல்லாகவும் அமர்ந்து இத் தெய்வங்களின் இவர்களின் வாழ்க்கையைப் பார்த்து ரசிக்கின்றன. லயத்துச் சூழலிலே இத்தெய்வங்களும் உண்டு. ஆகவே மக்களோடு இணைந்த தெய்வங்கள்! இத்தெய்வங்களின் கோயில் முற்றங்களில் இம் மக்களின் கலை கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நன்றியும் பாசமும் உள்ள மக்களாகையால் தமது கடவுளருக்கும் பொழுது போக்க வகை செய்திருக்கின்றனர்.

லயன்களிலும் இன்னொரு வகை உண்டு. 'காங்கி லயம்' என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இச்சொல் இன்று வழக்கற்று தொனி இழந்து இருக்கின்றது. GANG LIND என்ற சொற்கள் தான் 'காங்கி லயம்' என்றானது. புகையிரதப் பாதை பொது மராமத்துப் பாதை போன்ற பாதை பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களின் இருப்பிடம் தான் காங்கி லயம். இவர்கள் குழுவாக வேலைகளில் ஈடுபட்டதால் 'GANG' எனப்பட்டனர். ஆங்கிலத்தில் இச்சொல் சமூகப் பிறழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவோரின் குழுவைக் குறிக்கின்றது. தமிழில் தரக்குறைவு எனக் கருதப்பட்ட சேவைகளில் ஈடுபட்டோரை குறிக்க அதே சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இலங்கை அரசாங்கங்களின் தேசப்பற்று வளர்ந்து வெடித்தது. அதில் துறைமுகம், புகையிரதப் பகுதி, பொது மராமத்துப் பகுதி ஆகியவற்றில் வேலை செய்த இந்திய வம்சாவழித் தமிழர்கள் வெளித்தள்ளப்பட்டனர். அதனால் அவர்களின் இருப்பிடமான காங்கி லயம் பதப் பிரயோகமும் பதராய்ப் போனது.

இலங்கைச் சமூகம் வளர்ச்சி பெற்றது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மாற்றங்கள் பல நிகழ்ந்தன. வாழ்க்கை முறை மாறியது. மக்களின் சிந்தனையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. மேற்கு நாடுகளில் கொடுங்கோண்மைக்கு எதிராக மக்கள் கிளர்ந்தனர். பாசிசத்திற்கெதிராகப் போராட்டங்கள் முகிழ்ந்தன. சமதர்ம நெறி விரிந்தது. தொழிலாளர் இயக்கங்கள் தோற்றம் பெற்றன. தொழிலாளர் போராட்டங்கள் நடைபெறத் தொடங்கின. கொந்தளிக்கும் கடலலையாய் மக்களின் வாழ்க்கை முறை மாறத் தொடங்கியது. சிந்தனை மாறத் தெளிவு அரும்பத் தொடங்கியது.

இந்தப் பின்னணியில் பெருந்தோட்ட மக்களிடையேயும் புதிய அலை வீசத் தொடங்கியது. தமது விடுதலைக்கான நெறியைத் தழுவத் தொடங்கினர். தொழிற்சங்கங்கள் உருவாகின. அடக்கு ஒடுக்கு முறைகளுக்கெதிரான போராட்டங்கள் வெடித்தன. வீரமிகு இப் போராட்டங்களில் லயத்து வீரர்களும் வீராங்கனைகளும் களப்பலி ஆகினர். கோவிந்தன், ஏபிரகாம் சிங்கோ, ரெங்கம்மா போன்ற எண்ணற்ற தியாகிகள் போராடி மாண்டனர். சூறாவளி புறப்பட்டது. தடைகள் தகர்த்தெறியப்படுவதற்கான சாத்தியங்கள் தென்பட்டன. அந்தோ தடம் மாற்றுவிக்கப்பட்டது. விடுதலைப்பாதை - விமோசனப் போக்கு- திசை திருப்பப்பட்டது. சாத்வீகம் சல்லாபித்தது. கருணைக் கடல்களின் கறைகள் களங்கத்தை விதைத்தன. காட்டாற்று வெள்ளம் கலகமின்றி அமைதியானது. லயத்து மக்கள் வாழ்க்கை ஓட்டத்தில் திசை மாறிய கிளைக் கதையிது.

லயத்து மக்களின் நிறுவனங்களில் ஒன்று தோட்டப்பாடசாலை கோப்பி, தேயிலைச் செடிகளை லயத்துப் பயல்கள் உடைத்து வீணாக்குவதைத் தடுக்க வந்த நிறுவனம் இந்தப் பாடசாலை எழுத்து, வாசிப்பு, கணக்கு ஆகிய மூன்றையும் தரையில் உட்கார வைத்து ஒரே ஆசிரியர் இங்கு போதிப்பார். இந் நிறுவனத்தின் இறுதி நிலை போதனை 5ம் வகுப்பு. நாட்டில் அறிமுகமான இலவசக் கல்வி லயத்துப் பயல்களுக்கும் கிடைக்கலையாயிற்று. 60க்குப் பின்னர் இதன் பயன் வெளிப்படலாயிற்று. மீண்டும் விழிப்புணர்வு மீண்டும் போராட்ட அலைகள்.

நாட்டின் சுதந்திர உணர்வு பெரும்பாண்மை இன உணர்வாக வளர்ந்தது. 1932ல் துறைமுகத்தில் வேலை செய்த இந்திய வம்சாவழித் தமிழரை வெளியேற்றிய படலம் 1964ல் ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தமாக வளர்ச்சியடைந்தது. 'இராமாநுஜயம்' மீண்டும் மக்களை அக்கரைக்கு ஏற்றிச் சென்றது. தொகை குறைந்தது; பலம் நலிந்தது; போராட்ட அலை ஆரவாரம் குறைந்தது; ஆனால் தொகை குறைந்தாலும் மனோபாவ மாற்றம் குணாம்சமாற்றம் நிலுவையானது. விடிவெள்ளியின் கருவூலம் இது.

கால ஓட்டத்தில் லயம் உருமாறத் தொடங்கியது. இலங்கைத் தேயிலையின் தரத்தை அறிந்தோர் அதன் ஆக்கத்திற்கான மக்களின் தரத்தை அறியத் தொடங்கினர்,. சுய விழிப்புணர்வுகளாலும் போராட்டத்தாலும் ஏற்பட்ட நெருக்கடிகளோடு 'வறுமையிலிருந்து விடுதலை' போன்ற "FREDOM- FROM HUNGER" சர்வதேச அமைப்புக்களின் நெருக்கடிகளும் ஏற்பட்டன. இதன் பெறுபேறாக லயன் முறை மாற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்றது. வைத்திய ஆராய்ச்சி நிலையம் (MRI) குடிசை வகை(COTTAGE TYPE) இரட்டை வீட்டு முறையை'(TWIN QUARTERS)' சிபார்சு செய்தது.

பழைய லயன்கள் உருமாறத் தொடங்கின. பழைய சிந்தனைகளும், பார்வைகளும் மாறத் தொடங்கின. வீட்டுரிமை வேண்டுமென்ற உணர்வு வெளிப்படலாயிற்று. 1993 ஜுன் முதலாம் திகதி இது நடக்குமென்றனர். நடவாதாயிற்று!

நாளை?

நாளை எப்படி இருக்கும் ?

நாளை நலமானதாகத்தான் இருக்கும்! சமூக இயக்க விதியை யாரால் முடமாக்க முடியும் ? வரலாற்று சக்கரத்தை பின்னுக்கு இழுப்போர் சக்கரத்திற்குச் சமர்ப்பணமாவது பொய்க்குமா?

இது கற்பனையா? எல்லாமே வீழ்ச்சிக்கு என்ற விதி வணக்கம் செய்வோருக்குக் கற்பனையாக ஏன் பயமாகக் கூட இருக்கும். அண்மைக் காலப் போக்குகளும் ஆலாபரண அரசியலும் சிலருக்கு இவ்வாறான கிலேசத்தை ஏற்படுத்தியுள்ளது. எல்லாமே மாயையாய் மாறியதாக உளறல்கள் எழுந்துள்ளன.

லயம் விழித்துக் கொண்டிருக்கின்றது. அதன் ஆத்மாவை அடவு வைத்து ஆதாயம் தேடுவதோடு, தேடுவோருக்கு அந்தகாரமாய்க் காலம் தெரிகிறது, லயத்து நாற்றத்தையே நறுமணமாய்க் கொண்டோருக்கு இவ்வாறான தடுமாற்றம் ஏற்படாது. நானும் லயத்தில் பிறந்தவன் தான் என்று- 'உம்'மிலும், 'தான்'இலும் அடையாளம் காட்டுவோர் காரிருளைக் கண்டாலும் லயம் விழித்துக் கொண்டிருக்கின்றது. அது நாளைய வழிகாட்டிகளைக் கருவில் சுமந்து கொண்டிருக்கின்றது. நாளைய லயம் நாட்டிற்கே வழிகாட்டினாலும் காட்டக் கூடும்.

## புத்தக உலகம்

இலங்கையர்கோன், சி. வைத்திலிங்கம், கனக செந்திநாதன், அழகு சுப்பிரமணியம், வரதர், வ.அ.இராசரத்தினம், அ.ந.கந்தசாமி , தரஃபேல், டொமினிக் ஜீவா, தாளையடி சபாரத்தினம், சிற்பி, எஸ்.பொன்னுத்துரை, யாழ்வாணன், ப.ஆப்டீன், தெளிவத்தை ஜோசப், நீர்வை பொன்னையன், பத்மா சோமகாந்தன், செங்கை ஆழியான், சி.பன்னீர்ச்செல்வம், க. சட்டநாதன், யோ.பாலச்சந்திரன், அ. யேசுராசா, வெ.முருகபூபதி, சந்திரா தியாகராசா, சாந்தன், அல் அசூமத், தாமரைச்செல்வி ஆகியோரின் 37 சிறுகதைகள் அடங்கிய இத்தொகுதி போல மூன்று சிறுகதைத் தொகுதிகள் தொடர்ந்து வரும். நான்காவது புகலிடத் தமிழ்ச்சிறுகதைகளின் தொகுதி. ஐந்தாவது குறுநாவல்கள் அடங்கியவை. இந்த இமாலயப் பணிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் 'வெள்ளிப்பாதரசம்' தொகுதியை அனைவரும் வாங்கி ஊக்கமளிப்பது அவசியம். வெறும் ஊக்கத்துக்காகவல்ல, கையில் கிடைப்பதும் ஒரு அரிய பொக்கிஷமே.




### தமிழில் தரிப்புக்குறிகளின் பயன்பாடு
சி. சிவசேகரம்,

''மொழிபற்றிய கொள்கை வெறுமனே நோக்கஞ் சார்ந்ததல்ல. நடைமுறையே மொழியின் வளத்தையும் வளர்ச்சியையும் நிர்ணயிக்கிறது. தமிழின் மேம்பாட்டை அதன் தொன்மையிலும் அதன் பழைய இலக்கியங்களிலுமே தரிசிப்போர் அது நவீனத்துவத்தின் தேவைகட்கு எவ்வாறு முகங்கொடுக்கக்கூடும் என்பதைப் பற்றி அதிகஞ் கவனங்காட்டுவதில்லை. அதேவேளை, நவீனத்துவம் என்ற பேரில் அயலிலிருந்து வருவனவற்றை கண்மூடித்தனமாக தமிழ் மீது திணிக்கும் ஒரு போக்கும் உள்ளது ''. என்ற புரிதலுடன் புதுக்கவிதையின் கனதியையும் சமூகச் சார்பையும் மெருகிட்டு வளர்த்த கவிஞரும், தர்க்கத்திறன் மிக்க ஆய்வறிஞரும், காய்தல் உவத்தலற்ற விமர்சகரும், இயந்திரவியல் பேராசிரியருமாகிய சி. சிவசேகரம் தரிப்புக்குறிகள் பயன்படுமானதை விளக்கி எழுதியுள்ள அரிய நூல் இது.

## பிற்குறிப்பு
-காலைக்கதிர்

### கிழக்கில் புதிய உதயம்

கலை-இலக்கியச் செயற்பாடுகளின் விளைநிலமாகத் திகழ்வதில் மட்டக்களப்பு ஒருபோதும் சோடை போனதில்லை. யாழ் நூல் ஆய்வுக்குரியவராய் விபுலானந்தரை வழங்குவதற்கேற்ப கிராமியக் கலைகளின் உயிர்ப்பைப் பேணிய மண் அது.

வெறும் பழமைப் பேணல் மட்டுமல்ல, புதுமை நாட்டமும் எம்மிடம் உண்டு என்பதை நிரூபிப்பதாய் இவ்வருட மேதினம் மட்டக்களப்பில் நினைவுகூரப்பட்டது. தொழிலாளர் தினமாகிய மேதினத்தை மட்டக்களப்பு நகரில் கலை-இலக்கிய கர்த்தாக்கள் 'இலக்கிய மேதினமா'யும் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். 'வயல்' சஞ்சிகையும் மட்டக்களப்புக் கலை-இலக்கியப் பேரவையும் இணைந்து நடாத்திய இலக்கிய மேதினத்தில் அதன் புதுமையை முரசறையும் வகையில் ஏராளமானவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

ஒடுக்கப்பட்டவர்களின் குரல் என்ற தொனி நிகழ்ச்சியில் இழையோடியது. ''இலக்கியத்தில் பெண்கள்'' பற்றிக் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சித்திரலேகாவும் ''மக்கள் இலக்கியம்'' பற்றி தேசிய கலை-இலக்கியப் பேரவை செயலாளர் ந. இரவீந்திரனும் உரைநிகழ்த்தினர். நிகழ்ச்சிகட்கு கவிஞர் சாருமதி தலைமை தாங்கினார்.

வரவேற்கத்தகுந்த எழுச்சி!

### வஞ்சப்புகழ்ச்சி

பேராசிரியர் க. கைலாசபதி மறைந்து ஒரு தசாப்தத்திற்கு மேலாகிவிட்டது. கடந்து போன இந்தத் தசாப்தம் முழுமையும் இலக்கியத்தில் சமூகவியல் போக்கு வேண்டாத அளவு மிகைப்படுத்தப்பட்டு விட்டது. இனிமேல் அழகியலுக்குத் திரும்பவேண்டும் என்ற குரல் ஓங்கியொலித்தபடியிருந்ததை அனைவரும் அறிவோம். இந்த எக்காள முழக்கத்தின் போது பேராசிரியர் க.கை. இல்லாதது பலருக்கும் வசதியாகி விட்டது.அவருடைய மாணவர்கள் எனக் கூறி முந்திய 'சமூகவியல் பார்வை' எழுச்சியில் கொடிகட்டிப் பறந்தவர்களுக்கு இப்போது ? ஏன்?' பெரி...ய்...ய ஆதங்கக் குரல்கள் மாணவ சிரோமணிகளிடமிருந்து.

இன்று 'இரட்டையர்களாய் ஒன்றித்து இருந்து தொடர்ந்தும் உயிரோடிருக்கும் உற்ற நண்பர் ' கா.சிவத்தம்பி தனதும் மாணவர்களாகிய 'ஏன்' கேள்வியினர்க்குரிய பதிலை உதிர்த்திருக்கிறார். கைலாசபதியின் 'விமரிசனக் கொடுங்கோன்மை'தான் அந்தக் காரணமாம். இந்த அரிய கண்டுபிடிப்பு 'எழுத்தாளனும் சித்தாந்த நிலைப்பாடும்' என்ற தலைப்பிலான சிவத்தம்பியின் கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கட்டுரையை தமிழ் கூறும் நல்லுலகிற்கு தந்திருப்பது 'புதுமை இலக்கியம்' (ஜன/மார்ச் 1994) இதழ்.

இனி கைலாசபதியின் எதிரிகள் முற்றாகவே ஓய்வெடுக்கலாம். உங்கள் புனிதப் பணியை அதியுன்னத நண்பர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.!

ஆயினும், புதிய விழிப்புத் தொடங்குவதை மட்டும் உங்களில் எவராலும் தடுக்க முடியாதிருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



# மலையகத்திற்கு ஒரு மாற்றுத் தலைமை வேண்டும்

இன்று சகல துறைகளிலும் பின் தங்கிய ஒரு மக்கள் சமூகமாகக் காணப்படுவது மலையக இந்திய வம்சாவழிச் சமுதாயமாகும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடையாது. உழைக்கும் நாட்களுக்கு உத்தரவாதமும் இல்லை. சொந்த நிலம்-வீடு இல்லை. இதனால் சொந்தமான நிரந்தர முகவரி கூட இல்லை. மலையகக் கல்வி ஏனோ தானோ என்று விடப்பட்டுள்ளது. சுகாதாரமும் ஏனைய சமூக நலன்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் மலையக மக்களுக்கு கிடைத்தவை அற்பமானவையாகவும் கிடைக்கவேண்டியவை மலைபோல் குவிந்தும் காணப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக மலையக மக்களுக்கு தலைமை தாங்கி வந்த தொழிற்சங்க அமைப்புக்கள் குறிப்பாக இ.தொ.காவும்- தொண்டமானும் ஒட்டு மொத்தமாக எதனைச் சாதித்தார்கள் என்ற கேள்வி இன்று எழுந்து நிற்கின்றது. மலையகத்தின் புதிய தலைமுறையினர் மத்தியில் உருவாகியுள்ள இக்கேள்விக்கு தகுந்த விடைகாணப்படுவதிலேயே மலையகத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது.

எந்த ஒரு அரசியலுக்கும் அடிப்படையாக அமைவது வர்க்க சார்பு நிலையாகும் இனம், மதம் மொழி பிரதேசம் என்று எவ்வளவு கூறப்பட்டாலும் மேற்கூறிய வர்க்க அடிப்படையியே அரசியலின் அச்சாணியாக நின்று செயல்படுவதாகும். இக் கண்ணோட்டத்துடன் மலையக அரசியல் தொழிற்சங்கத் தலைமைகள் உயர் நோக்குடன் மறைந்திருக்கும் பல வரலாற்றுச் செய்திகளைத் தெளிவுடன் கண்டு கொள்ள ம்டியும்.

இ.தொ.காவும்- தொண்டமானும் இதுவரை செய்துவந்தனவற்றை எடைபோட்டுப் பார்த்தால் அவை ஏகப் பெரும்பாண்மையான மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை நலன்களைத் தொட்டு நிற்கவில்லை என்ற உண்மையைக் கண்டு கொள்ளலாம். "எனது தலைமையைப் பலப்படுத்துங்கள் ஐக்கியத்தை சிதைய விடாதீர்கள், ஒற்றுமையுடன் இ.தொ.காவை கட்டியெழுப்புங்கள்" என்றெல்லாம் கூறி மலையக மக்களுக்குத் தலைமை தாங்கி வந்த இ.தொ. காவும்- தொண்டமானும் சாராம்சத்தில் தமது உயர் வர்க்கம் சார்பாகச் சாதித்துக் கொண்டவைகளைக் கீழ்க்கண்டவாறு கூறலாம்.

1. தொழிலாளர்களின் சந்தாப்பணதணதைப் மாதாமாதம் லட்சக்கணக்கில் பெற்று தொழிற்சங்க சாம்பிராச்சியத்தை வளர்த்து ஒரு மலையக மேய்ப்பர் கூட்டத்தை உருவாக்கிக் கொண்டனர்.

2. ஒரே நேரத்தில் சொத்து, சுகம், ஆடம்பர வாழ்வு யாவற்றையும் பெற்று மலையகத்தின் அரசியல் தலைமைக்கு தம்மைத்தாமே அதிபதிகளாக்கிக் கொண்டனர்.

3. பெயரளவில் தோட்டத் தொழிலாளர்களின் தலைமையாகவும் செயலளவில் இந்திய சமுதாயப் பணப் பெருச்சாளிகளின் நலனைப் பாதுகாக்கும் தலைமையகமாக இ.தொ.கா வும்- தொண்டமானும் ஆகிக் கொண்டனர்.

4. அதனால் தமக்கு சமனாகவும் தமது வர்க்கத்திற்கு வாய்ப்பு வசதி பெற்றுக் கொள்ளக்கூடிய பெரு முதலாளித்துவ ஐ.தே. கட்சியுடன் மிக இலகுவாக தம்மை இணைத்து பெறக் கூடிய சகல வாய்ப்பு சதிகளையும் தாமே பெற்று அனுபவித்துக் கொண்டனர்.

5. இந்நிலை இன்று மட்டுமல்ல தனக்குப் பின்பும் தொடர வேண்டும் என்பதற்காக தன் இறுதிக் காலத்திலும் அடுத்த வாரிசிடம் மலையகத்தை ஒப்படைத்து கொத்தடிமை அரசியல் தலைமைக்கு அயராது பாடுபட்டு வருகின்றார் தொண்டமான்.

இந்நிலையிலே தோட்த் தொழிலாளர்கள் மத்தியில் இருந்து தோன்றி வளர்ந்து வந்துள்ள புதிய தலைமுறை பல்வேறு கேள்விகளை எழுப்பி நிற்கிறது. ஏன்? எப்படி? எதற்காக? இவர் யார்? இதுவரை செய்யப்பட்டவை யாவை? என்பன போன்ற சிந்தனையைத் தூண்டும் கேள்விகளை அடுக்கி வைத்துக் கேட்கிறார்கள். வெறும் கேள்விகளுடன் மட்டுமன்றி அவற்றிற்குரிய சரியான பதிலையும் தேட முற்படுகிறார்களக.

இத்தகைய சூழலிலேயே மலையகத்திற்கான மாற்றுத் தலைமையின் அவசியம் உணரப்படுகின்றது. அவ்வாறு மாற்றுத் தலைமையாக புதிய சக்திகள் உருவாக்கப்படும் போது பழைய தவறுகளை இப் புதிய தலைமுறையினர் இழைக்காது இருப்பதன் அவசியத்தையும் உணர்கின்றனர். மீண்டும் ஒரு இ.தொ.காவையும்- தொண்டமானையும் புதிய பெயரில் லேபலில் உருவாக்கிக் கொள்வதில் என்ன பயன்? தலைவர்கள் உருவாக்கப்படுவதில்லை. பிறக்கிறார்கள் என்ற குருட்டுத்தனமான நம்பிக்கையை மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் பரப்ப எத்தனிகசும் ஏமாற்றை இளைய தலைமுறையினர் விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள்.

ஆதலினாலேயே வீரதீரமும் வெண்தனல் தாண்டும் தமிழ்ப்படக் கதாநாயகன் போன்ற தலைமையை தலையகத்தில் எவரும் எதிர்பார்க்கவில்லை. மாறாக ஆள் எவராயினும் அவரது கொள்கை என்ன? கடந்த கால நடைமுறை யாது? குத்துக்கரண அரசியல் நிலைப்பாடு கொண்டவர்களா? சந்தர்ப்பவாத நிலையில் யாரோடும் எந்நேரமும் தம் சுய நலத்திற்காக இணைந்து நிற்கும் போக்கு கொண்டவர்களா? அடிப்படையில் தொழிலாளி வர்க்க விமோசனத்திற்கு சொல்லாலும், செயலாலும் செயல்படும் கொள்கையைக் கொண்டவர்களா? அல்லது தொழிலாளர்களுக்காகப் பகலில் பரிந்துரைத்து விட்டு மறைவில் முதலாளிகளின் நலன்களுக்கு சேவை செய்பவர்களா?

மேற்கூறிய யாவற்றையும் ஆழ்ந்த கவனத்திற் கொண்டே மலையகத்திற்கான புதிய மாற்றுத் தலைமையை தேடி உருவாக்க வேண்டும். தெளிவான தொழிலாளர் வர்க்க விமோசனக் கொள்கையும் தன்னலமற்ற அர்ப்பணிப்புடனான சேவையும் கொண்ட தூர நோக்குடைய மாற்று அரசியல் தலைமையே இன்றைய மலையகத்திற்கு அவசியந் தேவையாகும். இதனை நிறைவு செய்ய இளம் தலைமுறையினர் கடும்பணி புரிய வேண்டும். தனிமனிதப் பிரபல்யம் என்பதற்குப் பதிலாக கூட்டுத் தலைமையினது பொறுப்பும் செயலும் மலையகத்தின் அரசியல் தலைமையின் பண்பாக மாற்றப்பட வேண்டும். சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் அரவணைத்துச் செல்லும் அரசியல் தலைமையே முழு மலையகத்திற்கும் தேவைப்படுவதாகும்.

**- எம்.முனியாண்டி**

# கொட்டகலை கல்வியியற் கல்லூரி மூடப்பட்டுள்ளதேன்?

கொட்டகலை பத்தனையில் மூடப்பட்ட நிலையிலிருக்கும் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி எப்போது திறக்கப்படும் என்று முழு மலையகமும் மட்டுமன்றி இலங்கையர் சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ள அனைவரும் கேள்விக்குறியுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

பதில் சொல்ல முடியாத அல்லது நடவடிக்கை எடுக்க விரும்பாத அமைச்சர் தொண்டமானோ 'தான் போக முடியாத மூஞ்செலி தும்புக் கட்டையும் இழுத்துச் செல்ல முற்பட்டது ' போல் ஸ்ரீபாத கல்லூரியை விட நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வழமை போல் வரிந்து கட்டிக்கொண்டு இருக்கிறார். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முறையை மாற்றி மைக்க கல்வியியற் கல்லூரி முறைமை அறிமுகஞ் செய்யப்பட்டது. அதனடிப்படையில் துற்போது நாடெங்கும் பத்து கல்வியியற் கல்லூரிகள் இயங்குகின்றன. அவற்றில் 7 கல்லூரிகள் சிங்கள மொழிமூலம் மட்டும் இயங்குகின்றன. ஒன்று ஆங்கில மொழி மூலம் மட்டும் இயங்குகின்றது. தமிழ் மொழி மூலம் மட்டும் அட்டாளைச் சேனைக் கல்லூரி தனி முஸ்லிம் கல்லூரியாக இயங்கி வருகின்றது.

ஆனால் தமிழர்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட கொட்டகலைப் பத்தனை கல்வியியற் கல்லூரியும் வவுனியாக் கல்லூரியும் மாத்திரம் இலங்கைத் தமிழர்கள், இந்திய வம்சாவழித் தமிழர்கள், முஸ்லிம்கள் சிங்களவர்களுக்கான கல்லூரியாக இயங்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. அதனால் வவுனியா கல்வியியற் கல்லூரி சீராக இயங்கமுடியவில்லை.

கொட்டகலைக் கல்லூரி நிலை கொள்வதே முடியாதிருக்கின்றது எனலாம்.

1990 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கொட்டகலை கல்லூரி இதுவரையில் ஒரே ஒரு வருட ஆசிரிய மாணவர்களுக்கே பயிற்சி அளித்துள்ளது.

இக்கல்லூரியை மலையக மக்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக GTZஎன்ற ஜேர்மனிய நிறுவனம் கட்டிக் கொடுத்தது. அத்துடன் 1990 தொடக்கம் 1995 வரையும் அக்கல்லூரிக் கட்டிடப் பராமரிப்புச் செலவையும் பொறுப்பெடுத்துக் கொண்டது.

அத்துடன் பின்தங்கியுள்ள மலையக மாணவர்களின் நலன்கருதி 1990 - 1995 வரைக்குமான 5 வருட காலத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான கல்வித் தகைமைக்குக் குறைவான கல்வித் தகைமையுடன் மலையக மாணவர்களை அனுமதிப்பதெனவும் இணக்கம் காணப்பட்டது. க.பொ.த உயர் தரம் சித்தியடைந்தவர்களையும் அனுமதிப்பதற்குப் பதிலாக குறித்த 5 வருட காலத்திற்கு மட்டும் க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்தவர்களை அனுமதிப்பதற்கென தகுதி சேர்க்கும் அடிப்படைப் பாடநெறியும் ஆரம்பிக்கப்படலாமென்றும் இணக்கம் காணப்பட்டது.

அதைவிட கொட்டகலை கல்வியியற் கல்லூரியில் மட்டும் 25 வயதடைந்த மலையக மாணவர்களை அனுமதிக்கும் சலுகையும் வழங்க ஏற்பாடாகியிருந்தது. (ஏனைய கல்லூரிகளில் வயதெல்லை 22 ஆகும்).

இவை யாவும் மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்க ஏற்படுத்தப்பட்டபோதும் குறித்த 5 வருட சலுகைக் காலத்தில் 4 வருடம் முடிவடைந்த நிலையில் ஒரு வருட பாடநெறியை முடித்தவர்களே வெளியேறியுள்ளனர்.

இதற்கெல்லாம் காரணம் என்ன?

மலையக மாணவர்களுக்கென தமிழ் மொழிமூலம் இயங்கவேண்டும் என்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட கொட்டகலை கல்வியியற் கல்லூரியில் மலையக மாணவர்கள் 50 சதவீதமும் ஏனையதமிழ் பேசும் மாணவர்கள் 25 சாவீதமும் தமிழ் மொழிப் பாடநெறிக்கு எடுக்கப்பட வேண்டுமெனவும் எனைய 25 சதவீதமும் சிங்கள மொழிமூலம் பயில சிங்கள மாணவர்களை அனுமதிக்க வேண்டுமெனவும் நடைமுறைக் காரணமாக மாணவர் தெரிவிலும் பிரச்சினை ஏற்படுவதுடன் இனக் குரோதமின்றி கல்லூரியைக் கொண்டுநடத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

மேற்பட்ட இனவிகிதாசார சிக்கல்களுக்கும் மத்தியிலும் குறைந்த பட்ச இணக்கத்துடன் கல்லூரியை நடத்த வேண்டும் 5 வருட சலுகைக் காலத்தில் மலையக மாணவர்களுக்கு நன்மை கிட்டலாம் என்ற யோசனை கொஞ்சம் கூட இல்லாதிருக்கும் கல்லூரி அதிபரின் அசமந்த போக்கும் கொட்டகலைக் கல்லூரி மூடப்பட்டிருப்பதற்கு இன்னுமொரு காரணமாகும்.

அமைச்சர் தொண்டமானின் சிபார்சினால் நியமிக்கப்பட்ட அந்த அதிபரும் தொண்டமானும் ஸ்ரீபாத கல்லூரி இயங்குவது தங்களது எதிர்காலத்திற்குச் சரியில்லை என்று ஆருடம் கேட்டு விட்டனர் போலும் தெரிகிறது.

மாணவர்கள பல போராட்டங்களை நடத்திவிட்டனர் விரிவுரையாளர்களும், பெற்றோர்களும் திணைக்கள வாசல் வரை ஏறி இறங்கிவிட்டனர். உத்தியோகத்தர்களைக் கண்டு பேசிவிட்டனர்.

ஆனால் கொட்டகலைக் கல்லூரி திறக்கப்படுவதாக இல்லை. இதே வேளை சலுகை வருடத்தில் 4 வருடங்கள் பிரயோசனமற்றுக் கழிந்து விட்டதால் இன்னும் மூன்று வருடங்களுக்கு மேலதிகமாக சலுகைகளை வழங்க ஜேர்மன் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. ஆனால் கல்லூரி திறக்கப்படுமா?.

கொட்டகலைக் கல்லூரி மலையக மாணவர்களுக்கான தனித்தமிழ்க் கல்லூரியாக இயங்கவிடக்கூடாது என்பதில் பேரினவாத அரசாங்கம் குழப்பங்களை விளைவித்திருக்கின்றது.

தனித்தமிழ்க் கல்லூரியாக இயங்கிவிடாது இனவிகிதாசார பாடநெறிகளை ஏற்படுத்தி இனமோதலை ஊக்குவித்துவருகின்றது. 'கொட்டகலைக் கல்வியியற் கல்லூரி' என்று ஜேர்மன் நிறுவனத்துடன் இணக்கம் காணப்பட்ட பெயரைக் கூட "ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி" என்ற பெயரை அரசாங்கம் இட்டதற்கு பேரினவாத அடிப்படையே காரணமாகும்.

அதேவேளை மேற்படி இன முரண்பாட்டை ஒருபுறம் தள்ளி வைத்து விட்டு மலையகக் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, சலுகை வருடங்களைச் சரியாகப் பயன்படுத்த அதிபரின் நிர்வாகம் தயாரில்லை. அரசியற் காரணங்களுக்காக அமைச்சர் தொண்டமானும் கூட ஸ்ரீபாத கல்லூரி மூடி இருப்பதே நல்லதென கருதுகிறார்.

**- அ.ராகவன்**

படிப்பகம்

# தென் ஆபிரிக்காவும் எதிர்காலமும்

கறுப்பு ஆபிரிக்க சுதேசிய மக்களைப் பெரும்பான்மையாகவும் காலனித்துவவாதிகளான வெள்ளையர்களைச் சிறுபான்மையாகவும் கொண்ட தென் ஆபிரிக்காவின் ஆட்சி அதிகாரம் முன்னூற்றிச் சொச்ச ஆண்டுகளுக்குப் பின்பு கறுப்பு மக்களின் கைகளுக்கு வந்து சேர்ந்துள்ளது. அதன் மூலம் கறுப்பு மக்களை அவர்களது சொந்த மண்ணிலேயே இன-நிறப் பாகுபாட்டிற்கு உட்படுத்தி கீழ்த்தரமாக நடாத்தி வந்த சிறுபான்மை நிறவெறி ஆட்சிக்கு முடிவும் கட்டப்பட்டு விட்டது. இந்நிலை ஏற்படுவதற்கு தென் ஆபிரிக்க மக்கள் கடந்த அரை நூற்றாண்டுகளாக நடத்தி வந்த போராட்டம் தியாகமும் வீரமும் துன்பமும் நிறைந்ததாகும். குறிப்பாக் ஆபிரிக்க தேசிய காங்கிரசும் அதனோடு இணைந்த ஏனைய சக்திகளும் முக்கியமாக தென் ஆபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியும், பலம் மிக்க தொழிற்சங்க இயக்கமும் நடாத்தி வந்த விட்டுக் கொடுக்காத வெகுஜன ஆயுதப் போராட்டமே தென் ஆபிரிக்க விடுதலையின் உயிர்நாடியாக விளங்கி வந்தமை கவனத்திற்குரியதாகும். இவற்றை எல்லாம் சமகாலத் தொடர்புச் சாதனங்கள் சர்வதேசரீதியில் இருட்டடிப்புச் செய்து விட்டன. நெல்சன் மண்டேலா இருபத்தியேழு ஆண்டுகள் சிறையிலிருந்த ஒரே காரணத்தால் தான் தென் ஆபிரிக்காவுக்கு விடுதலை கிடைத்ததாகக் காட்ட முயற்சிக்கின்றனர். அது மட்டுமன்றி மண்டேலாவை 'காந்தி'யின் தென் ஆபிரிக்க வாரிசு என்றும் காட்டிக் கொள்ள முயல்கின்றன. இது தென் ஆபிரிக்க மக்களது வீரத் தியாகம் கொண்ட



போராட்டங்களை மறைக்க முயல்வதுடன் நெல்சன் மண்டேலாவின் ஆயுதப் போராட்ட மார்க்கத்தையும் அதன் மூலமான ஆபிரிக்க விடுதலையையும் உலகின் கண்களுக்குத் தெரியாதவாறு இருட்டடிப்புச் செய்யும் முயற்சியுமாகும்.

நெல்சன் மண்டேலா உறுதியும் தியாக வாழ்வும் கொண்ட ஆபிரிக்கத் தலைவர் மட்டுமன்றி சர்வதேசத் தலைமைத்துவத்திற்குத் தகுதி காண் தலைவராகவும் உயர்ந்து நிற்கின்றார். அவரையும் அவரது விடுதலைப் போராட்ட மார்க்கத்தையும் எதிர்த்து வந்த் அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் தலைமையிலான உலக பிற்போக்குச் சக்திகளும் இன்று மண்டேலாவை.ஏற்றிப் போற்றிப் புகழ்பாட ஆரம்பித்து விட்டன. இதன் உள்நோக்கம் சிந்திக்க வேண்டியதாகும்.

தென் ஆபிரிக்காவின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் மண்டேலாவுக்கும், தென் ஆபிரிக்க மக்களுக்கும் உள்ள உரிமையையும் உறுதிப்பாட்டையும் பல நூறு வழிகளில் சிதைக்கவே அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் முயல்வார்கள் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. எனவே தென் ஆபிரிக்க மக்களுக்கும் நெல்சன் மண்டேலாவிற்கும் முன்னால் பெரும் பொறுப்பும் கடமையும் விரிந்து கிடப்பது மட்டுமன்றி புதிய போராட்ட முனை திறப்பதற்கான அவசியமும் தோன்றி இருக்கின்றது. அதுவே ஏகாதிபத்திய நவகாலனித்துவத்திற்கு எதிரான போராட்டமாகும்.

# வடகொரியா மீது அமெரிக்க கழுகுக்கண்

தமது ஏகாதிபத்திய நலன்களுக்காக எந்த நாட்டின் மீதும் ஆதிக்கமும், ஆக்கிரமிப்பும் செலுத்த முனையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கழுகுக் கண்கள் தற்போது வடகொரியா மீது பார்வையைத் திருப்பி உள்ளது. லிபியா, ஈராக் போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு எதிராகவும், சோஷலிச கியூபாவிற்கு எதிராகவும் பொருளாதார, ஆயுதத் தடைகளைக் கொண்டு வந்த அமெரிக்கா அந்த வரிசையில் வடகொரிய சோஷலிச நாட்டிற்கு எதிராகவும் தடைகளை விதிக்க முழு முயற்சி எடுத்து வருகின்றது. தனது நோக்கையும் போக்கையும் நடைமுறைப்படுத்த ஐ.நா. சபையை குறிப்பாகப் பாதுகாப்புச் சபையை ஒரு கருவியாகப் பயன்படுத்தியும் வருகின்றது. அமெரிக்கா அதுவும் ஒரு சோஷலிச நாடான வடகொரியாவிடம் அணுவாயுதம் இருப்பதன் ஆபத்து தனது கூட்டாளியான தென்கொரிய ஆளும் வர்க்கத்திற்குப் பாதகமானது மட்டு



மன்றி அந்நாட்டில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கப் படைகளின் இருப்புக்கும் ஆபத்து என்பதினாலேயே அமெரிக்கா வடகொரியா மீது பாய எத்தனிக்கின்றது. 'நான் செய்தால் சரி, நீ செய்தால் பிழை' என்பதே அமெரிக்க நியாயம்.

## உலக உலா

**வெகுஜனன்**

வடகொரியாவின் அணு ஆலைகளைப் பார்வையிட ஐ.நா.சபையின் அணுசக்தி ஏஜென்சி உறுப்பினர்களை அனுமதிக்க மறுத்தமை



வட்கொரிய ஜனாதிபதி

யைச் சாட்டாக வைத்து அமெரிக்கா வடகொரியா மீது நடவடிக்கை எடுக்க கங்கணம் கட்டி நிற்கின்றது.

அமெரிக்காவிற்கு அணுவாயுத உற்பத்தியின் அபாயம் பற்றியோ அன்றி, மனித குல நாசத்திற்கு அது வழிவகுக்கும் என்பதிலோ எள்ளளவும் அக்கறை கிடையாது. கவலை யாதெனில் தனது உலக அணுவாயுத ஆதிக்கத்திற்குச் சவால் விடக்கூடிய நிலை உருவாகுவதைச் சகிக்க முடியாமையேயாகும்.

கிழக்கு ஆசியாவிலே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பரம வைரியாக இருந்து வரும் வடகொரியாவில் ஐம்பதுகளிலே அமெரிக்கா வாங்கிக் கட்டிய அடியின் வலியை மறந்து இருக்க முடியாது. மீண்டும் அது அடி வாங்க முன்வந்தால் அதனைக் கொடுப்பதற்கு கொரிய மக்கள் தயாராகவே உள்ளனர். முன்பும் ஐ.நா.சபையை அமெரிக்கா தனது ஆக்கிரமிப்புக்குப் போர்வையாக்கியது. இப்போதும் அதையே செய்ய முற்படுகின்றது. அன்று ஸ்டாலின் தலைமையிலான சோவியத் யூனியன் அமெரிக்காவை எதிர்த்து அதன் போலி வேஷத்தை அம்பலமாக்கியது. இன்று சோவியத் யூனியன் மறைந்து போன நிலையில் அமெரிக்கா சுலபமாக வடகொரியா மீது சண்டித்தனம் செய்யப்பார்க்கிறது. ஆனால் ஐ.நா.சபையின் உறுப்பு நாடான சீனா, வடகொரியா மீதான அமெரிக்க நடவடிக்கைகளுக்குத் தனது கடும் எதிர்ப்பைக் காட்டி 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தப் போவதாக எச்சரித்துள்ளமை அமெரிக்காவைத் திகைக்க வைத்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் கொரிய மக்கள் வடக்கிலும் தெற்கிலும் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு உலக மக்களுடன் இணைந்து நமது ஆதவையும், ஒருமைப்பாட்டையும் தெரிவிப்பது கடமையாகும்.



# கம்போடியப் போராட்டமும் கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாடும்

கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகக் கம்போடிய மண்ணிலே பல்வேறு நிலைகளிலான போராட்டம் நடைபெற்று வருகின்றது. அப்போராட்டத்தின் குறிக்கோள் அந்நிய சக்திகளின் ஊடுருவலை முறியடித்து அவர்களது அடிவருடிகளாக இருப்போரின் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்தி சுதந்திரமும், சுபீட்சமும், சுயாதிபத்தியமும் கொண்ட கம்போடியாவை கட்டியெழுப்புவதேயாகும் இந்தத் தேசிய இலட்சியத்தின் முன்னணிப் பாத்திரத்தை வகிப்பவர்கள் கம்போடிய கம்யூனிஸ்டுகளேயாவர். அவர்களே 'பொல்பொட்' தலைமையிலான 'கெமர்ரூச்' என அழைக்கப்படுபவர்கள். ஐ.நா.சபையின் சமரசமும் மேற்பார்வையும் கம்போடியாவில் சமாதானத்தைக் கொண்டு வந்து விட்டதாகப் பறைசாற்றப்பட்டது. ஆனால் உண்மை அவ்வாறில்லை என்பதைத் தொடரான சம்பவங்கள் வெளிக்காட்டி வருகின்றன. வியட்நாமியப் படையினர் வெள்ளை உடையிலும், வெவ்வேறு துறைகளிலும் இருந்து வருகின்றனர். ஐ.நா.படையினர் அமைதிப் பணி என்ற போர்வையில் இருந்து வருகின்றனர். சமாதானம், தேர்தல், புதிய ஆட்சி என்று கூறப்பட்ட இரண்டு வருட காலத்திற்குள் பல்தேசிய நிறுவனங்கள் தத்தமது கடைகளை கம்போடியாவில் திறந்து வியாபாரத்தை ஆரம்பித்து விட்டனர். இராட்சத நிறுவனங்கள் அந்நாட்டின் கனிவளங்களைக் கொள்ளையடிக்கத் திட்டம் தீட்டி நிற்கின்றன. ஆனால் இவை யாவிற்கும் குறுக்கே இடைஞ்சலாச நிற்பது 'கெமர்ரூச்' என அழைக்கப்படும் கம்போடிய ஜனநாயகக் கட்சியினரான கம்யூனிஸ்டுகளே என்பது தான் இன்றைய பிரச்சினையாகும். மிகவும் சக்திமிக்க விடுதலைப்படையையும் குறிப்பிட்ட விடுதலைப் பிரதேசத்தையும் கொண்டுள்ள கம்போடிய கம்யூனிஸ்டுக்கள் அண்மையில் அரசபடைகளால் கைப்பற்றப்பட்ட 'பாலின்' என்னும் பகுதியை பலத்த தாக்குதல் மூலம் மீளக் கைப்பற்றி ஆட்சிப்படையை அழித்தொழித்துத் தமது வளர்ந்து வரும் பலத்தை பலப்படுத்தி உள்ளனர். முழுமையான தேசிய விடுதலையையும் ஜனநாயகக் கம்போடியாவையையும் வென்றெடுக்கும் நீண்ட போராட்டப் பாதையில் செல்லத் தம்மை அர்ப்பணித்துள்ள கம்போடிய கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாட்டினை கம்போடிய மக்கள் ஆதரித்து தமது பங்களிப்பினையையும் வழங்கி வருகின்றனர். ஐ.நா.அமைதிப்படை ஏமாற்றும், அந்நியர்களின் ஊடுருவலும் நீடித்து நிலைக்கப் போவதில்லை. மண்ணின் மைந்தர்களான கம்யூனிஸ்டுகளும் ஏனைய ஜனநாயகச் சக்திகளும் இறுதியில் வெற்றி பெற்றே தீருவார்கள்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதியபூமி

PUTHIYAPOOMI

පුදිය පූමි

## தோட்டத் தொழிலாளர்களே !

## வீட்டு உறுதிகளை வாங்கத் தவறாதீர்கள்!

தோட்டத்தொழிலாளர்களே! நீங்கள் பரம்பரை பரம்பரையாக் வசித்து வரும் எட்டடிக் காம்பராவும், அதற்கு முன்பாகவும் பின்பாகவும் (டபிள் காம்பரா என்றால் முன்பாக மட்டுமுள்ள) உள்ள காணியும் உங்களுக்கே சொந்தம் என்ற உரித்தை வழங்கும் வீட்டு உறுதிகளைப் பெற்றுக் கொள்ள யூலை 17ம் திகதி நுவரெலியாவிற்குச் செல்லத் தவறாதீர்கள்! ''பிரதமர் உங்களுக்கு உறுதிகளை வழங்குவார்'' என இ.தொ.கா தலைவர் தொண்டமான் அறிவித்துள்ளார்.



இது பற்றிய செய்தி 'வீரகேசரியில் மட்டும்' வெளிவந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

''ஒனக்கு வீடு வேணுமுனா யானைக்கு ஓட்டுப் போடு. மே மாசம் 31ஆம் தேதியோட ஒன் வீட்ட ஒனக்கு சொந்தமாக்கித் தருவேன்'' என்று கூறி உங்களை ஏமாற்றிக் கடந்த மாகாணசபைத் தேர்தலில் உங்கள் வாக்குகளை யூ.என்.பிக்குத் திரட்டிக் கொடுத்த அதே தொண்டமான் தான் இப்போதும் கூறுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் வர இருப்பதால் உங்களை சொர்க்கத்திற்கும் அழைத்துச் செல்ல வருவார்கள் அரசியல்வாதிகள்.

நீண்ட நாட்களாக மலையக அமைப்புகள் அனைத்தும் 0விடுத்து வந்த கோரிக்கையை நிறைவேற்றப் போவதாகக் கூறிக் கொண்டு இம்முறையும் யூ.என்.பிக்கு மலையக மக்களின் வாக்குகளை திரட்டிக் கொடுக்கும் வேலையைத் தான் தொண்டமான் செய்யப் போகிறார்?

வீடுகள் சொந்தமாக்கப்பட வேண்டுமென்றால் வீடுகள் நில அளவையாளரால் அளக்கப்பட வேண்டும். அதன் பின்னர் ஒரு குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின்படி நன்கொடையாக வழங்கப்படுவதாக அரசாங்க அமைச்சர் அல்லது அதிகாரி ஒருவரால் கையெழுத்திடப்பட்டு உறுதிகள் வழங்கப்பட வேண்டும்.

எதிர்வரும் யூலை 17ஆம் திகதி அப்படி ஒன்றும் நடைபெறப் போவதில்லை என்று ''புதிய பூமி'' நம்பகமாக அறிகிறது.

ஏற்கனவே ''புதிய பூமி'' எழுதி இருந்தது போன்று தோட்டக் குடியிருப்புகள் அனைத்தும் ஒரு கூட்டுறவு நம்பிக்கை அமைப்பிற்குச் சொந்தமாக்கப்படும். அதில் நீங்கள் எல்லோரும் அங்கத்தவராகச் சேர வேண்டும். அங்கத்துவப் பணமாக ரூபா 250/= உங்கள் ஒவ்வொருவர் சம்பளத்திலுமிருந்து கழிக்கப்படும்.

கூட்டுறவு நம்பிக்கை அமைப்புத் தொழிலாளர்களாகிய உங்களுடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டு உங்களிடம் வீடுகளைக் கையளிக்கும். அதன் பின்னர் மாதாந்தம் உங்கள் சம்பளத்திலிருந்து 200ரூபாவோ 300ரூபாவோ வீட்டு வாடகையாகக் கழிக்கப்படும். அவ்வாறு தொடர்ந்து நீண்ட காலத்திற்குக் காசு கழிக்கப்பட்டால் (40,50 வருடங்களும் செல்லலாம்). பிறகு உங்களுக்கு லயன் காம்பராக்கள் சொந்தமாக்கப் படலாம்.

உத்தேசக் கூட்டுறவு நம்பிக்கை அமைப்பு வீட்டை உங்களுக்குக் குடியிருக்க வழங்குவதாகக் கூறும் ஒரு கடிதத்தையே நுவரெலியாவில் வைத்துப் பிரதமர் வழங்க விருக்கிறார் என்றே அறிய முடிகின்றது. அதுவும் அடையாளமாக ஒரு சிலருக்கு மட்டுமே வழங்கப்படவுள்ளன.

அந்தக் கடிதம் வழங்கும் வைபவம் யூ.என்.பிக்கு தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைச் சேகரிக்கும் பிரசாரக் கூட்டமாகவே நடைபெறும்.

அடுத்த வாரமளவில் தோட்டக் குடியிருப்புக்களை கூட்டுறவு நம்பிக்கை அமைப்பு பொறுப்பேற்க உள்ளதாகவே அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் வெளிவர உள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புக்களைச் சொந்தமாக்குவது என்றால் அவ்வாறு வெளிப்படையாகத் தெரிவிக்கும் அறிவிப்பே செய்யப்பட வேண்டும். அப்படி நடைபெறாது.

எல்லாவற்றிற்கும் மேலாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள காலத்தில் வீடுகளைச் சொந்தமாக்குவதென பிரதமரால் வழங்கப்படவுள்ள கடிதங்கள் எந்தளவிற்குப் பெறுமதிமிக்கது என்பது கேள்விக்குறியே!

எனவே ஜாக்கிரதை! தோட்டத் தொழிலாளர்களே! இம்முறையும் ஏமாறாதீர்கள்! உங்களுக்கு வீடுகளைச் சொந்தமாக்குவதாகக் கூறினால் ஒரு பொதுப் பிரகடனத்தின் மூலம் சகல தொழிலாளர்களுக்கும் வீடுகளைச் சொந்தமாக்க வேண்டுமென்று கோரிக்கை விடுங்கள். சொந்தத்தை வழங்கும் உறுதிகளைக் கையிலே பெற்றுக் கொள்ளுங்கள்.

அவ்வாறு செய்யப்படாத எதுவும் உங்களை ஏமாற்றுவதாகும்!



உங்களுக்கு நீங்கள் வசிக்கும் வீடுகளை சொந்தமாக்குவதாகக் கூறிக்கொண்டு ஒரு கடிதத்தைக் கையில் கொடுத்துவிட்டு எதிர்வரும் மாதங்களிலிருந்து உங்கள் வீட்டிற்கு வாடகை அறவிடப் போகிறார்கள் இதுவரையும் சும்மா வசித்து வந்த வீடுகளுக்கு இனிமேல் வாடகை கொடுக்கப் போகிறீர்களா?

இல்லை, சொந்தமென உறுதிகூறும் வீட்டு உறுதியைக் கையிலேயே வாங்கப் போகிறீர்களா? தீர்மானம் உங்களுடையதே!

**இரா.செழியன்**

## தமிழர் மானம் காக்க தேர்தலில் போட்டியிடும் குமாரின் யூ.என்.பி விசுவாசம்!

சிறுபான்மையினரை மரம் செடி கொடி என்று ஜனாதிபதி பேசிவிட்டதால் திரு.குமார் பொன்னம்பலத்திற்குக் கோபம் வந்துவிட்டது. ஆங்கிலப் பத்திரிகைகளில் வழமைபோல் எழுதினார். அதுமட்டுமல்ல தேர்தல்கள் வருவதால் அவரின் கோபத்தைக்காட்ட ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிடப் போகிறார், வெல்லமாட்டார் தானே! அதனால் பொதுத்தேர்தலிலும் போட்டியிடப் போகிறார்.

யூ.என்.பி, சுதந்திரக் கட்சி இரண்டுமே தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமாட்டாது. ஆகவே தமிழர் அக்கட்சிகளுக்கு ஆதரவை வழங்காது தமிழர் ஒருவருக்கு ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார். யூ.என்.பி கடந்த 17வருடங்களாகத் தீர்வு காணவில்லை. காண முற்பட்டிருந்தாலும் சுதந்திரக்கட்சி விட்டிருக்காது. சுதந்திரக்கட்சி 1989இல் D.P.A.யோசனைகளைத் தன்னைக் கேட்காமல் வாபஸ் பெற்றுவிட்டது. எனவே அவர்களுக்கு பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறை இல்லை என்கிறார்.

எங்களது வாக்குகள் தேவையென்பதால் எமக்கான நியாயமான தீர்வை நடைமுறைப்படுத்திவிட்டு வரட்டும் என்று கூறுகிறார். இது எதிரணியிலிருக்கும் கட்சிகளுக்குச் சாத்தியமானதா என்பது பற்றி அவர் அறியாதவரல்லர்.

கொழும்பு வாழ் ஆங்கிலம் பேசும் தமிழர்கள் மானம், ரோசம் பற்றியெல்லாம் சிந்திப்பது வரவேற்கத் தக்கதே!

இருந்தபோதும் கூட யூ.என்.பிக்கு உயிர் கொடுப்பதில் தமிழ்த் தலைவர்கள் போன்று விசுவாசமானவர்கள் ஒருவரும் இல்லை என்பதைக் குமார் பொன்னம்பலம் மீண்டும் நிருபிக்கப் போகிறார் என்பதே உண்மை.

ஏனெனில் தமிழ் மக்களுக்கு எதிராக யூ.என்.பி செய்துவரும் அநியாயங்களினால் தமிழ் மக்களிடம் யூ.என்.பி எதிர்ப்பு அதிகரித்துள்ளது. அதிகரித்துள்ள யூ.என்.பி எதிர்ப்பினால் தமிழ் மக்களினுடைய வாக்குகள் யூ.என்.பிக்கு எதிராக எதிர்க்கட்சிகளுக்கே போய்ச் சேரும்

அந்த யூ.என்.பி எதிர்ப்பு தமிழ் வாக்குகள் எதிர்க்கட்சியினருக்கு சென்றால் அவர்கள் வெற்றிபெற வாய்ப்புண்டு.

குமார் பொன்னம்பலம் தமிழர்களின் தனித்துவத்தை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காக தமிழர்கள் யாவரும் தனக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்பதன் மூலம் யூ.என்.பி எதிர்ப்பு தமிழ் வாக்குகளால் யூ.என்.பி தோற்கடிக்கப்படாமல் தப்பி பிழைக்க வழி செய்கிறார்.

யூ.என்.பி தமிழர்களுக்கு செய்து வரும் அநியாயங்களுக்காக அதனை தோற்கடிப்பதிலும் விட, தமிழர்கள் தமிழனுக்கு வாக்களித்து தங்களது தனித்துவத்தைக் காட்டுவதையே தமிழரின் உயர்ந்த விடுதலைப் போராட்டமாகக் கொள்ளும் குமார் பொன்னம்பலத்



தின் யூ.என்.பி விசுவாசம் ஒன்றும் அவரது தந்தைக்கு குறைவானது மில்லை. அது ஏனைய தமிழ் அமைப்புகளினது யூ.என்.பி விசுவாசத்துக்குக் குறைந்ததுமல்ல.

1977ஆம் ஆண்டு தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவரானார். பாராளுமன்றத்தில் 18 'தமிழீழ எம்பிக்கள்' இருந்தனர். ஒன்றும் நடைபெறவில்லை.

1983 தொடக்கம் 10வருடமாகி ஆயுதப்போராட்டம் நடக்கிறது. அதனாலும் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படவில்லை.

வரப்போகும் தேர்தல்களில் தமிழர்கள் குமார் பொன்னம்பலத்துக்கு வாக்களிப்பதன் மூலம் மட்டும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு விடப்போகிறதா?

**பொ. தமிழ்ச்செல்வன்**

வழமையான தமிழர் தலைமையின் யூ.என்.பி விசுவாசம் இன்று குமார் பொன்னம்பலத்திடம் காணப்படுவது மட்டுமன்றி மாற்றுக்கருத்தை ஏற்க முடியாத தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு எதிரான அரசியலைத் துரோகம் என்று கூறிவந்தது போன்று குமார் பொன்னம்பலமும் அவரை ஆதரிக்க மறுப்பவர்களை ''துரோகிகள்'' என்றும் கூறி வருகின்றார்.

எனவே தமிழர் கட்சிகள் 'அடித்தவன் காலையே நக்கும்' யூ.என்.பி விசுவாசத்தையும், மாற்றுக் கருத்து கொண்டவர்களை 'துரோகிகள்' என்று கூறும் பண்பையும் கைவிடும்போதுதான் தமிழர் பிரச்சினை பற்றி ஒரு முனையாகச் சிந்திக்க முடியும்.

வெளியிடுபவர் : இளையதம்பி தம்பையா விலாசம் : இல.14, 57வது ஒழுங்கை, கொழும்பு - 6.
பிரசுரம்: நவமக அச்சகம், 334 காலிவீதி, இரத்மலானை.